உ

கடவுள் துணை,

பொன்னுங்கால்

அமிர்தகவிராயரவர்களாலியற்றிய

இரகுநாதசேதுபதி

# ஒருதுறைக்கோவை

(-)

நாணிக்கண் புதைத்தல்.

(*)

இஃது,

சிதம்பரம்

கருணாநந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

(*)

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியார்

ஆண்டெஸன் அவர்களால்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1895ஹு

இரகுநாதசேதுபதி

# ஒருதுறைக்கோவை.

(*)

நாணிக்கண்புதைத்தல்.

ூமேவுதெய்வத்தளிர்முகைபூத்தபொற்கோலவல்லி
ரமேவுகல்விப்புயறளவாய்ரகுநாதனிசைப்
ாமேவுகந்தகிரிமணிச்சாரற்பளிக்கறைசூழ்
ாமேவுமற்புதநம்பாலகத்துக்களிதருமே. (க)

நலங்கைக்கொண்டவிராமேசர்,தாண்முடிசூடியெழு
நாலங்கைக்கொண்டரகுநாயகன்செம்பிநாடனையீர்
ீசலங்கைக்கொண்டுயர்வல்லமென்பாலருள்செய்தனல்ல
ாலங்கைக்கொண்டரசாள்வதுபார்த்திருங்கண்களித்தே. (உ)

ூயுந்தமிழினும்போரினும்பாரிலகத்தியனுந்
ீசயும்புகழ்தளவாய்ரகுநாதன்சிலம்பில்வள்ளை
ாயுங்கயலிந்தநேமிகண்டாலெனப்பார்த்திடினுன்
ீருயுந்தடமெனவேயணங்கேயுனைச்சொல்லுவனே. (ங)

ீதனூர்மணமுல்லைவெண்டாரும்பைந்தமிழ்ச்செந்தொடையுந்
ானூர்தடம்புயத்தான்ரகுநாதன்றமிழ்ச்சிலம்பில்
ானூரிளம்பிறைவாணுதலீர்தும்பிவாழுமுங்கள்
ானூர்குறிஞ்சியிற்செல்கின்றதாரையைக்காட்டிடுமே. (ச)

ண்டேந்தியசங்கினம்போலமல்லிகைப்பாரமுகைச்
ீசண்டேந்தியகரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பில்
ண்டேந்தியசெங்கைவாழ்வேயென்னெஞ்சமறுகுமதங்
ிகாண்டேந்தியவெங்கரிக்கோடுதோயுங்குருதிகண்டே. (ரு)

ானைச்சுரபியைச்சிந்தாமணியைமந்தாரமென்னுங்
ானைப்பொருகொடையான்ரகுநாயகன்கந்தகிரிச்

சோனைப்புதுமதுவார்குழலீரித்துஇக்கைவெம்போ
ரானைக்கிசையிலலங்காரமானுக்கழகல்லவே.

போரோறுவெங்கணரக்கன்முன்மாதலிபூட்டியபொற்
றேரோறுசிங்கம்ரகுநாதன்றேவைச்சிலம்பில்வெய்ய
காரோறுவன்கண்மைசேர்ணையுற்றாயொருகாளைபின்சேர்
வாரோறுகொங்கையைநீதடுத்தாயிலைவன்புறவே

மைம்மானிகர்த்தமலைவளர்காதலிமாதுவளர்
பெம்மானருட்குரியோன் ரகுநாதன்பிறங்கலன்னீர்
கைம்மான்குதிக்கறியாதென்றுநீசொன்கலைமதிக்கு
ளிம்மான்குதிக்குமென்றேபிடித்தீர்கையிரண்டினுமே.

ஆரத்தொடையிடைநீலமிட்டாங்களிதோயமுல்லை
வீரத்தொடைபுனைவோன்ரகுநாயகன்வெற்பனையீர்
மாரத்தொடைக்குண்முகைத்தாமனாவிட்டுவன்கொலைசூழ்
கோரத்தொடையெனவோபுதைத்தீர்மைக்குவலயமே.

நடைநிலஞ்சாதிதுலமோடறிவங்கநல்லதந்திப்
படையணிசேர்முன்றிலான்ரகுநாதன்பனிவரைவாய்க்
குடையலர்காந்தளம்பூம்போதுதன்னைக்குறிஞ்சியெங்கோ
னுடையதண்போதென்னவோவிழியூடுகொண்டொத்தியதே

இயலைத்தலைபெற்றமுத்தமிழ்வாணர்க்கெழுமடங்கு
புயலைப்பொருவுகையான்ரகுநாதன்பொருப்பனையீர்
முயலைத்தவிர்த்தமதியூடுலாவியமூரிவரிக்
கயலைபிடிப்பதென்னேகுறமாதர்களிறிகழ்ந்தே

வரைசேர்மருமத்திருவஞ்சியாடமணியுஞ்சலாம்
விரைசேர்தளவத்தொடைரகுநாயகன்வெற்பிலின்ப
வுரைசேர்தமனியப்பாவாய்செந்தேனங்கையூடுறமின்
னிரைசேரமிர்தகடத்தையென்னேவிட்டுநிற்கின்றதே

பாகந்தருமிசைவல்லோர்க்குமான்மதம்பாய்தருகை
மேகந்தருதளவாய்ரகுநாயகன்வெற்பிலிந்திர
போகந்தருகளியானையிலேறுமென்புந்தியின்ப
மோகந்தருகிளியேதிட்டிசேர்தன்முறையல்லவே

நாகஞ்சேரிமலர்ப்பூங்காவும்பொய்கையுநாள்மறையும்
நாகஞ்செறிதமிழ்த்தேவையர்கோன்ரகுநாதன்வெற்பில்
நாகஞ்செறிகின்றதென்மதிசாயநம்பார்வைதன்னை
நாகஞ்செறிவஞ்சியாய்மறைத்தாயதுநன்றலவே (௰௪)

மாவானசூரனிருப்பையெல்லாமத்திவாய்க்குதவுந்
தேவானவனைப்பணிரகுநாதன்சிலம்பிலென்மேற்
காவானபைங்குழலீர்படிநேமென்றுகைகளினாற்
பூவானதுங்கடுத்தீர்விடுத்தீர்பொற்பொருப்பினையே. (௧௫)

தார்கொண்டபாடலம்பேரோடையாம்பறருங்கமலச்
சீர்கொண்டசெங்கரத்தான்ரகுநாயகன்றேவைவெற்பி
லேர்கொண்டநீலமடலேயுகைபெரிதீனமன்றோ
வார்கொண்டகொம்மைப்புளகப்படாமுலைவஞ்சியர்க்கே- (௧௬)

தன்னம்புயத்திற்குவலயந்தார்முல்லைதாங்கிமன்னர்
சின்னம்பறித்தரகுநாதன்றேவைச்சிலம்பிலின்று
பொன்னங்குடத்தையெதிர்கண்டலென்னமைப்போதுங்கண்டாற்
கன்னங்கறுத்தகுழலாய்நற்காரியங்கைப்பலனே. (௧௭)

செந்தாதும்பூவுஞ்சுருதிவண்டார்ப்பத்தினம்பொழியு
மந்தாரமன்னகையான்ரகுநாதன்மழவையன்னீர்
நந்தாமணம்பெறவந்தேனுக்கின்றுநறியமல
ரந்தாமரையொளித்தீரளித்தீர்சிற்றரும்பினையே. (௧௮)

பாரேழ்கழனியும்வாடாதுதன்மப்பயிர்விளைக்குங்
காரேயனையரகுநாதன்றேவைக்கனங்குழையீர்
நீரேபொறிவெம்படநாகங்கைவிட்டுநின்றுவெய்ய
சூரேபுரிநஞ்சமெவ்வாறுகையிற்சுருடுகின்றதே. (௧௯)

யாழுங்குழலும்பசுந்தேனும்பாகுமிசைந்துகுடி
வாழுந்திருமொழியாய்ரகுநாதன்மணவைவண்டு
சூழுங்களபமுலையானைமுன்னித்துயர்க்கடல்வாய்
வீழுங்கொடுமையெல்லாங்கண்டிலார்செக்கைவேலவரோ. (௨௰)

நீலக்கரும்புயறூராகணம்வெண்ணிலாவணிந்து
ஞாலத்துவந்தமின்னேதளவாய்ரகுநாதன்வரைக்

கோலத்தினைக்குளிர்மென்றுமானினங்கூடுமென்றோ
சாலப்புதைத்துநின்றாய்செங்கண்வேழந்தருங்கொங்கையே. (௨௧)

சேயென்றுவந்தகளவாய்க்குநாவலர்தீவிற்குமோர்
தாயென்றுவந்தரகுநாதன்றேவைத்தமிழ்வரைமேற்
காயென்றுவில்வக்கனியளித்தீரொன்கலைமதிக்கு
வாயென்றுசற்றுமலராதுபாணிக்குண்மைம்மலரே (௨௨)

கோட்டங்கவிர்த்தகுடைமன்னர்கேசரிகூட்டமன்ன
ராட்டங்கவிர்த்தரகுநாதன்வெற்பிலென்னாருயிர்க்கு
வாட்டந்தவிர்த்தவரிவிழியாரைமறைத்தருளி
னீட்டந்தவிர்ப்பதென்னோகுன்றவாணரிளங்கொடியே. (௨௩)

ககராசவீரவெங்கேதனத்தான்கந்தமாதனப்பொன்
னகராசன்வீணைக்கிறைதளவாய்ரகுநாதன்வரைச்
சிகராசலத்தின்மலராதநீதிதெளிந்துகொண்டோ
மகராலயத்தின்மலரவைத்தீர்செம்மலர்க்கஞ்சமே, (௨௪)

கம்பக்கருணையந்தேனூறுஞானக்கனியருள்சே
ரும்பர்க்கரசனையான்ரகுநாதனுயர்வரைவாய்
விம்பக்கனியிதழீர்மணிமார்பில்வெங்கோடுடைய
கும்பக்கரிகொடிதாம்விலக்கீர்மதகுஞ்சரமே. (௨௫)

தொடைபெற்றகொண்டல்பிறையிளநீர்சுமந்தோதிமத்தி
னடைபெற்றகன்னிக்கரும்பனையாய்ரகுநாயகன்வேற்
படைபெற்றசெங்கையும்வேழமுமாய்நிற்றல்பார்த்துமதிக்
குடைபெற்றவெய்யவனெய்யவன்போர்க்குறிகொண்டனனே. (௨௬)

கீதங்குழல்கஞ்சம்வீணைதடாரிகிளர்ந்தபஞ்ச
நாதஞ்சிலம்பியதேவையர்கோன்ரகுநாதன்வரைக்
காதங்கமழ்குழலீரெனதாவிகலக்கில்வரு
மேதம்பெரிதென்னவோமறைத்தீரின்றிணைக்கயலே. (௨௭)

பண்மூடயசெங்கனியிதழீரெழுபாரகந்தன்
னுண்மூடியபுகழ் ன்ரகுநாதனுயர்வரைவாய்க்
கண்மூடியோகியர்போலநின்றீர்கருத்தினுக்கு
விண்மூடியவரைகைவிடிலேதம்விளைவிக்குமே. (௨௮)

மேகந்தருமணிவெண்முத்தாசியின்மென்மலர்ப்புன்
ஞகந்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வெற்பி
லேகந்தருபதின்மூன்ருன்பதான்மறைத்தின்குநின்றி
ராகந்தருமைந்துமொன்பதுமேவெளியாகியதே. (உகூ)

பாவாய்நிறைகின்றசெம்பொருளோடுநம்பைம்பொருஞ்
நாவாய்தருகடற்றேவையர்கோன்ரகுநாதன்வரைப்
பூவாய்மனுமுறையாலெமைவாழப்புரக்குமிளங்
கோவாயவவனாயின்சமறைத்தாலதுகொள்கையன்றே. (௩0)

வில்லிளங்காளைமயில்காப்பமானைவெகுண்டெழுந்த
நல்லிளங்கேசரிதேவையர்கோன்ரகுநாதன்வரை
வல்லிளங்கோலமணிமுலைசாலவருத்தும்வண்டு
புல்லிளங்காமர்விரிந்தசெங்காந்தட்புதுமலரே, (௩க)

கல்லொன்றிரண்டிளநீர்தாங்கிமுன்வரக்கண்டுமுனி
சொல்லென்றுநின்றரகுநாதன்றேவைச்சுரும்பின்மணி
வில்லொன்றுவாணுதலீர்செப்பினூடத்தமேவுமல்லா
லல்லொன்றுநீலக்கடலூடுசேர்ப்பதறிவின்மையே. (௩உ)

பண்ணூர்குதலைக்கனிவாய்சிவந்தபசுங்கிளியீர்
நண்ணூர்சமரிற்புலிதளவாய்ரகுநாதன்வரைக்
கண்ணூரிணைக்கயன்மங்கலமாமெனக்கைக்கொண்டநீர்
தண்ணூர்தரளமணிக்கும்பநீக்குதறக்கதன்றே (௩௩)

சந்தேறியதடஞ்சாரலிலாயிரந்தண்மதிபோ
னந்தேறியகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைக்
கொந்தேறியமலர்வாள்புனேந்தீர்மதகுஞ்சரந்தேன்
வந்தேறியமொழியீர்புனேவீர்செங்கைமாமலரே. (௩௪)

கார்பூத்தபுன்னைவெள்ளோதிமஞ்சிதரன்கைவளைபோ
லேர்பூத்ததேவையர்கோன்ரகுநாயகனேமவெற்பில்
வார்பூத்தபூண்முலையீரறிந்தாய்ந்துமணப்பதற்கோ
தார்பூத்தமெல்கையிலேந்திநின்றீரின்பசாகரமே. (௩௫)

யால்வாய்ப்பசுந்தமிழ்விசியவாசம்பரந்தவைகைக்
கால்வாய்த்தவிரையர்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பின்

மேல்வாய்த்திருந்தவெழுத்தாறரிதின்விலக்குமென்றே
நூல்வாய்த்தநுண்ணிடையீர்மறைத்திரணிநோக்கினையே! (௩௬)

ஆவியும்பூவுந்தகரமுந்தேனுமணிந்துநறு
நாவியுஞ்சேர்குழலீர்தளவாய்ரகுநாதன்வரைக்
காவியங்கைபுனைந்தீர்விடுத்தீர்தனங்கஞ்சமலர்த்
தேவியும்போலநின்றீர்விருப்பேதுங்கள்சிந்தனைக்கே. (௩௭)

வாவிக்குளோற்றைவனசமென்றேதுமைவானிலங்குங்
காவிச்செழுங்குடையான்ரகுநாயகன்காவிரிநாட்
டாவிக்குயிர்தந்தகோதோர்தொழுதனமப்படிநீர்
சேவிக்கநல்குங்கமலாலயமுத்திசித்திக்கவே. [௩௮]

சங்கேகொடைத்தருவேயெனவாழ்வுதருங்கருட
வெங்கேதனத்தளவாய்ரகுநாயகன்வீரைசுற்றும்
பங்கேருகத்தனமேயொளிசேர்தனபாரமலை
யிங்கேயிருக்கக்கடலேறினீரென்னிறையவரே. (௩௯)

கன்னித்திரைச்சங்குமிப்பியுமீனுங்கராவுமொளிர்
நன்னித்திலஞ்சொரிதேவையர்கோன்ரகுநாதன்வெற்பின்
மின்னிற்சிறந்தமின்னேகரிகோட்டுவெண்முத்திருக்க
மன்னித்திகழ்கஞ்சமுத்தமென்னேகைவளைகின்றதே. (௪௰)

போரயினுகம்புலிசிலைவாள்வெம்பொறிவழங்கு
மாரெயில்வீரையர்கோன்ரகுநாதனணிவரைக்கு
ணீரரணுகியமைவேலைக்கொண்டநேரிழையீர்
பேராரணகிரிதுர்க்கநீக்குதல்பெண்புத்தியே (௪௧)

திரையோங்குபாற்கடற்பூந்தாமரைச்செழுந்தேனிருக்கும்
வரையோங்குமார்பன்ரகுநாதன்றேவைமணிவரைமேல்
விரையோங்குபங்கயந்தாங்கியநீரிருவெற்பொளித்தா
லுரையோங்குவிண்மணிபெண்மணிநீரென்றுரைசெய்வரே- (௪௨)

மதிசேரமுகவிதழிபஞ்சிகளவாசவைகை
நதிசேர்தெளிபுனல்வீரையர்கோன்ரகுநாதன்வரைப்
பதிசேரிளமுலைசங்கிலிகாட்டும்பணியணிந்தாய்
துதிசேர்பரவையுங்கரட்டிலென்போலில்லைசுந்தரனே. (௪௩)

ள்ளார்வெங்கானந்திரைவரைவானமுகடுசென்று
ள்ளார்புகவெஞ்சிலைகுனித்தோன்ரகுநாதன்வரைக்
ள்ளார்கருங்குழலீர்கொடுங்கூற்றையுங்கையமைத்தீர்
ள்ளார்தமைவிலக்கிரெமைவாழப்புரக்கின்றே. (௪௪)

பாற்றுங்கமடம்பணிகுலநாசம்பொறுத்தசுமை
ாற்றும்புயவரையான்ரகுநாதனணிவரையீர்
தாற்றுங்கயலைமறைத்தீர்பொற்கஞ்சமுந்தோற்றுவித்தீர்
ாற்றும்பொழுதினினீரோமதுரைத்தடம்பொய்கையே. (௪௫)

றைபெற்றமாலைக்கதிர்வேலுமாலுமெந்நாளுஞ்செவ்வி
றைபெற்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளமென்னும்
றைபெற்றதாருவைமைந்நீலவண்டுகுடைந்துறா
றைபெற்றபோதமைத்தீர்வந்துசாய்க்குமிபக்குன்றமே. (௪௬)

டகமாமதில்வீரையர்கோன்வண்டலம்புழலை
யடலர்மாலிகையான்ரகுநாயகனேமவெற்பிற்
டகமேவுகைக்கொண்டீர்குவலயர்தோகையன்னீர்
டலைவேண்டிவந்தேனளித்தீர்பரங்குன்றினையே. (௪௭)

ங்கமுஞ்சீனமுஞ்சோனகநாடுங்கலிங்கமும்போர்
ங்கமுஞ்சேர்முன்றிலான்ரகுநாதன்மணவைவரைச்
ங்கமுஞ்சாயவருகரிப்போரிலென்சிற்றுயிரு
ங்கமுந்தேய்வதுபார்த்திரங்காததென்னரணங்கே. (௪௮)

ாலுந்துடியுங்கொடிமின்னுநாசமுறுண்மதியும்
போலுந்தளரிடையாய்ரகுநாதன்புனற்கரந்தைச்
சேலுங்கமலமுங்காவியுமாவுந்தெவ்வேந்தைவென்ற
லவலும்பொருவும்விழியையெந்நாட்கண்டுமேவுவனே (௪௯)

ல்குங்கிரணமணிசெம்பொன்வாரிமருங்கிருபா
ால்குந்திரைவைகைநாடனெங்கோன்ரகுநாதன்முறைப்
புல்கும்பதியில்விசும்பிடைநீண்டுபுகுதரும்
னுல்குந்துடியிடைதோற்றதென்றேவின்றெளிக்கின்றதே. (௫௰)

கக்கண்ணிற்சிலமறையோரைவாழ்வித்துவான்கொணர்ந்து
கக்கண்ணிற்சேர்த்தரகுநாதன்றேவைச்சயிலமன்னீர்
ழகக்கண்ணிற்காண்டலரிதென்பதோவிழிமூடியன்மா
லகக்கண்ணிற்காணப்பதிநோக்கினீர்நன்றறிவுமக்கே (௫௧)

லைவேலியையும்புரந்தசெய்கோன்மனுராசன்மனுக்
லைநாளெரிக்கும்வெங்கோன்ரகுநாதன்கரந்தைவெற்பிற்

ஒருலையாதிருந்தெம்மனத்தூடுதோன்றுந்துயர்தொலைக்கக்
கொலைவேலிருந்தகையாற்குறிப்பீர்பணிக்கொம்பினையே. (ருஉ

தேசிகப்போதணிசண்பகக்காடுந்திருந்திழையார்
நாசியொப்பாயலர்வீணையர்கோன்ரகுநாதன்வரைப்
பாசிழைப்பூவைமுகைக்கோங்கில்வேடன்கைப்பாணமுற்றுற்
காசினிப்பாலுனைப்பாலையென்பார்கலைகற்றவரே. (ருங

முகைகாட்டியமுன்றின்முல்லைநல்லார்தம்முகமதிவெண்
ணகைகாட்டியபுகலூர்த்தளவாய்ரகுநாதன்வரைத்
தகைகாட்டியசெவ்விளநீரிலம்புயஞ்சாரிலகிற்
புகைகாட்டியகுழனன்போகிநீயும்புனலுலகே. (ருச

ஆடியதோகையன்னார்முகம்போன்மதியம்பொனெயில்
சூடியகாதனைப்பதிரகுநாதன்சுரும்பில்வள
நீடியபெண்ணைக்குநம்பைகண்டேன்பலர்நெய்தல்கண்டால்
வாடியசிற்றிடையிருமைப்போலுமணலுலகே. (ருரு

கொத்தூர்குழலியர்கண்டமொப்பாவெழில்கொண்டமுத்தி
னத்தூர்கரந்தைரகுநாயகன்செம்பிநாட்டுவரை
மூத்தூர்மருப்பிற்கருவிளங்காணின்முளரிமல
ரொத்தூர்மதிமுகத்தீருமைக்கார்வெற்புலகென்பரே. (ருசா

தொடைகாட்டும்பூங்குழலார்நடைபோலிளந்தூவியன்ன
நடைகாட்டும்வைகையம்பூந்துறையான்ரகுநாதன்வெற்பி
லிடைகாட்டுநூல்வெற்பிளமுலைகாட்டுமிளங்கொடியீர்
படைகாட்டுமைவிழிகண்டுரைப்பேனிப்படியென்னவே. (ருஎ

பூவளர்வாவிக்கமலமும்வீதியும்பொன்மனையு
மாவளர்தேவைப்பதிரகுநாதன்மணிவரைமேற்
கோவளர்தானத்தினங்கன்றுசேர்கைகுறித்தமைத்தீர்
காவளர்பூவைக்கரசுமைப்போலெவர்காசினிக்கே (ருஅ

அறங்காவல்கொண்டமனுமுறையாலணிநாவசைந்து
கறங்காமணிமுன்றிலான்ரகுநாதன்கரந்தையன்னீ
ருறங்காதவெங்கண்மதகரிபாயநெஞ்சூடுருவிப்
புறங்காணிலார்பொருப்பார்பிணைபாயப்பொருக்கினுமே. (ருகூ

ங்காமதேனுவெனவந்தகார்செம்பிநாடனுயர்
செங்காவியங்குடையான்ரகுநாதன்சிலம்பின்மிக்க
வெங்காமவெய்யவிடாய்க்கிளநீர்தந்துவெவ்விடத்தை
யங்காடவல்லிநல்லீர்மறைத்தீர்நன்றறிவு[illegible] (சாய

லையேந்துமாளிகைமாளிகைமாதர்கணெஞ்சமதிக்
லையேந்துந்தேவை ரகுநாதன்வெற்பில்வெங்கள்ளைவரிச்
லையேந்தும்வாணுதலிரங்கையேந்துஞ்செயலிதென்னே
விலையேந்துமாணிக்கவள்ளமிங்கேவைத்துமெய்ம்மறந்தே (௯௧)

பொற்பனைவேழம்புரவிவெள்ளோதிமம்பூவையர்தோ
ற்பணைமேவுங்கரந்தையர்கோன்ரகுநாதன்மணி
வெற்பனைவாழ்வெமதென்றேமறைத்துமைவேலைவளர்
ற்பணைதோகைமயிலேலவனைவளங்காட்டியதே. (௯௨)

ரைக்குள்வந்தசிந்தாமணிநீதிவிளங்கவெழு
ரைப்புரந்தரகுநாதன்வெற்பிற்பகலில்விண்சேர்
ராக்குலம்புவிகாணவொண்ணுதெனுந்தன்மைகொண்டோ
ரைச்சுமந்ததளத்தாய்நின்செங்கைமறைக்கின்றதே (௯௩)

ழியும்பிரசமலர்முல்லையான்வையமேழும்பொய்யும்
ழியுந்தவிர்த்தரகுநாதசேதுபதிவரையிர்
மொழியுங்குவலயம்பாணியினுலின்றுமூடவந்து
ழியுந்திரையுங்குமிழியுந்தோன்றித்துயர்செய்யுமே. (௯௪)

த்தந்தெளிக்குங்கலைவாணர்சங்கத்தமிழ்க்குருகிச்
த்தங்களிக்குமரகுநாதன்றேவைச்சிலம்பின்மணி
முத்தம்பதிக்கும்பவளச்செவ்வாயிளமூரன்மின்னே
த்தந்தனக்குக்கடல்பொருந்தாதென்பராய்ந்தவரே. (௯௫)

றந்நீர்சொரிமுத்தமாணிக்கராசிமுகந்தருவி
ன்னீர்சொரிகந்தமாதனத்தான்ரகுநாதன்வரைப்
பொன்னீர்பவளத்தமுதெமக்கீயும்பொழுதினஞ்சு
ன்னீர்தருமெனவோமறைத்தீர்செழுந்தாமரைக்கே (௯௬)

ரனூர்விழியெனமைந்நீலம்பூத்தவயற்புகலூர்
ரானுகளிசைசேர்தளவாய்ரகுநாதன்வரைக்
ரனூர்கருங்குழலீர்சுறவார்கடல்கைப்படுத்தீ
ரனூல்விடுத்ததென்னீர்வரையிழுத்தகளிடமே. (௯௭)

ல்லார்நகைக்குமனைவளர்தாளிணைமலரு
ல்லார்கரந்தைரகுநாதன்றேவைவரையின்மணிக்
ல்லார்கனக்குழையீர்மருண்டிரின்றுகண்டசர
மெல்லார்வரிவளைக்கைபுனைந்தீர்குருகெய்தவுமே. (௯௮)

ஆரியர்போற்றுமிராமேசர்தாளிணைக்கன்புவைத்த
சூரியன்கிளையர்கோன்ரகுநாதன்சுரும்பிலின்று

சூரியவாளிரண்டக்கையிலேந்தியகொங்கையிளங்
காரிகையிருமைமாதங்கியாரென்பர்கண்டவரே. (௬௯

வாளும்பரசும்பயிரமுமேகொண்டுமோற்றலரை
யாளுந்தனிவடிவேல்ரகுநாதனணிவரையீர்
தோளுங்கரும்புமெனதாருயிர்வந்துசூறைகொள்ள
நீளுங்கணைகொண்டுநின்றுலெவ்வாறுயிர்நிற்கின்றதே (௭௰

இலையேதழைத்துக்கொழுங்கனல்பூத்திகல்காய்த்துவெய்ய
கொலையேபழுத்தசெவ்வேல்ரகுநாதனைக்கூடலர்போன்
மலையேயெனக்களித்தீர்கடலேறுகைவாய்த்துநின்றீர்
சிலையேபடைத்தநுதலீர்திகைத்ததென்சிந்தனையே. (௭௧

நெய்வாய்த்திகன்மன்னர்சோரியின்மூழ்கிநிணமருந்து
மைவாய்த்தவேற்படையான்ரகுநாதன்மணவையன்னீர்
மெய்வாய்ந்தகோலவனமுலையார்தம்மைவிட்டுவேளைக்
கைவாய்ந்தமைவிழியாருடன்சேர்தல்கடனல்லவே (௭௨

செம்பேந்தியமதில்வீரையர்கோன்முச்சகமனைத்து
நம்பேந்திவாழமனுமுறையான்ரகுநாதன்வெற்பி
லம்பேந்திநிற்பதுங்கண்டேனினியுன்றனக்கையினாற்
கொம்பேந்திநின்றென்னிடையூறதீரக்குறிக்கொள்ளுமே (௭௩

பாவுக்கிசையும்பெயரோபுனைந்துமெய்ப்பாவலர்தங்
நாவுக்கிசையும்பெரும்புகழான்ரகுநாதன்வரைக்
கோவுக்கிறையின்றளித்தீரெமக்குக்கொடுத்தவிரு
மாவுக்கிறைமிலிசெய்தீர்புகழும்வகையறிந்தே (௭௪

தாருஞ்சிலையுங்கலவையும்பூணுந்தருந்தருவுங்
காரும்பொருவுகையான்ரகுநாதன்கரந்தையன்னீர்
வாருந்துவண்டமருங்குலுநானும்வருந்தலைநீர்
பாருங்கொடிதுகொடிதுகண்டீரிப்பணைமுலையே (௭௫

கார்த்தலந்தோயுங்கொடிமதில்சூழுங்கரந்தையர்கோன்
பார்த்தலம்போற்றும்ரகுநாதன்வெம்பிற்பசுங்கதிர்ப்பூண்
சேர்த்தலங்காரித்தமின்னேயினிமைச்செந்தேனிங்கனே
கூர்த்தலங்கைத்தலமேவியவாறுகொடுமையின்றே (௭௬

மடற்கேதகைசூழுந்தேவையர்கோன்வயமன்னர்க்கெல்லா
மடற்கேசரிதளவாய்ரகுநாதனணிவரையீர்
விடற்கேதுணிவுற்றிருநாகமும்வெளிவிட்டுவெங்கட்
கடற்கேதிருநெடும்பூட்கைதந்தீரென்னகாரணமே (௭௭

மேவிய தூதின்மெலிவுரைத்தேயன் றுமெய்த்தருந
னேவிய மேகம்ரகுநாதன்றேனைவயிமெண்டிசையுந்
தாவியசெங்கண்மடப்பிடிலோக்கேயினைறதாவவுயி
ரோவியநீகொடுத்தாலென்செய்ய இவ்வுலகினையே (௭௮)

சொற்பேறுபெற்றதளவாயெனுந்துரைராயனரு
ணற்பேறுசேனைரகுநாயகன்செம்பிநாட்டினுயர்
வெற்பேறவிட்டுத்துணையார்கண்ணேனணிவினைக்கொளித்தா
லற்பேறுநெஞ்சமினியென்படாதுபெண்ணுரைமுகே. (௭௯)

கோங்கார்முகிழ்முலைக்கொம்பரன்னீரண்டகோளமெல்லா
நீங்காதமெய்ப்புகழான்ரகுநாதனெடுங்கரங்கைப்
பாங்கார்கொடிக்கயருங்காநின்றீர்கண்பயோதரத்தே
திங்காந்தலையிடிலாங்காண்மதிகுலத்தென்னவரே. (௮௰)

தூதேநடந்தகவிகுலமாமணிதோன்றுகொடி
மீதேயுயர்த்தரகுநாயகன்றமிழ்வினையிலிப்
போதேவனத்திணிறைகங்கைமேவப்புரிந்ததனுன்
மாதேயுனையுஞ்சொலலாம்ரவிகுலமன்னனென்றே. (௮௧)

செய்க்கஞ்சனந்தம்பயில்செம்பிநாடன்சினவடிவேற்
பொய்க்கஞ்சனந்தப்பொருரகுநாதன்பொலக்கிரிமேன்
மெய்க்கஞ்சனந்தருமின்னேயதிசயமெல்லியநின்
கைக்கஞ்சனந்தங்கவிங்கெனக்கேதனங்கண்ணுற்றதே. (௮௨)

கண்டேயெனுஞ்செங்கனிமொழியீர்சிலைக்கார்விசயன்
றிண்டேர்கடவும்ரகுநாதன்வெற்பிற்செந்தாமரைமேற்
கொண்டேகுவளையிருக்கல்கண்டேனக்குவளையின்மேல்
வண்டேய்கமலமுங்கண்டேனிதுவென்னமாயங்களே. (௮௩)

நீதநந்தாததளவாய்குமாரனெடுங்கருட
கேதனங்கொண்டரகுநாதன்றேனைவகிளர்ந்தகந்த
மாதனங்கண்டுவந்தேன்றனுக்கோடிவளைகடலைப்
போதனம்போனடையீர்கண்டுகொனுடல்பூரிப்பதே. (௮௪)

ஊனிடமானபுனைவேற்பகைதினைத்தோடிநெடுங்
கானிடமாகவென்றோன்ரகுநாயகன்கந்தகிரித்
தேனிடமாமொழியீர்கணைப்போதிற்செறிவிலங்கை
மானிடமாகவிட்டீருமைப்போலெவர்வல்லவரே. (௮௫)

காவேர்பொருப்புமருவிபும்போற்கமழ்முல்லையந்தார்
தாவேவிளங்கும்புயரகுநாதன்றமிழ்க்கரந்தைத்

தேனேவளவனிலைமவிட்டேசென்றுதென்பொதிய
மானேரடைதனன்றோபுண்டரீகமணிக்கொடியே. (௮௬)

சீலத்துமிக்கதளவாயளித்தருள்செல்வனெந
காலத்தும்பொய்யுரையான்ரகுநாதன்கரந்தைநகர்
போலத்துலங்கும்பொலங்குழையீர்சென்றுபூம்புனறோ
யாலத்துமார்தளிர்கண்டோமிதுவென்னவற்புதமே (௮௭)

நடுப்பதுமாலயமாதனையாய்நடைகற்றவன்றே
கொடுப்பதுங்கற்றரகுநாதன்றேவைக்குவட்டின்மத்
னெடுப்பதுமெய்வதும்பாராய்வளைதருமிக்கையினி
லடுப்பதுங்கஞ்சத்தருட்பாகும்வேலுக்கழகல்லவே. (௮௮)

மெய்ம்மலராசனமின்றன்மிதிலையில்வில்வளைத்து
கைம்மலர்மேகந்துரைரகுநாதன்கரந்தைவெற்பிற்
செம்மலர்மேவுந்தேனுளதேயன்றித்தேனிடத்தி
லம்மலர்தோற்றுங்கொல்லோசொல்லுவாய்முல்லையாரணங்கே (௮௯)

வணங்காததெவ்வைப்பொருமால்சொரிமுத்துவன்னியன்பொன்
னணங்காருமார்பன்ரகுநாதன்றேவையணிவரைமேற்
குணங்காதலிக்குநெடுமீனந்தன்னுடன்கூடியத்த
மிணங்காதிணங்குமழியாதகன்னியிளம்பிடியே. (௯௰)

முறையுந்தருமமுநீங்காதமானமும்முரசுமன்னர்
திறையுந்தருமுன்றிலான்ரகுநாயகன்றேவைவெற்பி
னிறையுங்கமலத்திருப்பதல்லாலிந்திரநீலத்தின்மே
லிறையுங்குடிபுக்கிருப்பதுண்டோபுவியேழினுமே. (௯௧)

கலைக்கேநெடுங்கடலன்னடைக்கலங்காத்தவன்செஞ்
சிலைக்கேவிசயன்ரகுநாயகன்றமிழ்த்தேவையிலா
லிலைக்கேகருங்கொழுந்தேந்துமின்னேகுன்றியற்கையன்றோ
வலைக்கேவளர்வதென்றோசங்கபாணியமர்கின்றதே. (௯௨)

பணையேதடங்கண்டுயிலாதவினைப்பதியுரக
வணையேதுயிலும்ரகுநாதன்வெற்பிலென்னருயிர்க்குத்
துணையேயுனைவந்திரந்தேற்குவெந்துயர்தோன்றவடிக்
கணையேபிடித்துச்சிலைவிடுத்தாய்கற்றகல்விநன்றே. (௯௩)

நெய்க்கின்றகூந்தற்கொடியிடையீர்மனுநீதியினன்
மெய்க்கின்றவாய்மைரகுநாயகன்கந்தவெற்பிலிப்போ
துய்க்கின்றமான்மறியும்புண்டரீகமுமோரிடைநீர்
வைக்கின்றநீதியினாலிணையோவஞ்சிமன்னனுமே. (௯௪)

றியாதவெவ்வர்க்கும்பின்னிட்டபேர்க்கும்பிறங்கிலேவே
லெறியாதவன்ரகுநாயகன்றேவையிலென்றுக்கண்டே
பறியாச்சிற்றிடையிர்பொருந்தாமையடைக்கியீர்
பொறியாதுவிட்டதென்னேபொறிசூழ்ந்தபொற்கோட்டையின்றே ()

காரணவுங்கொடைவீரயர்கோனன்றுசஞ்சனவிட்ட
வாரணம்வென்றரகுநாதன்வெற்பின்மணக்குறிபோற்
றோரணமுத்தத்தொடுமொளிளந்தளிர்தோன்றவெதிர்
பூரணகும்பம்வைத்தாய்மலர்விட்டிற்பொலங்கொடியே. (௬௬)

அலம்பணிவிளைபுடைசூழும்வினைக்கதிபனெழு
தலம்பணிதேவையர்கோன்ரகுநாதன்றமிழ்க்கரந்தைப்
புலம்பணிமேலைப்பொன்னைமறந்துங்கைப்போதின்மின்னார்
சிலம்பணியாரென்பதோவரிபாய்வண்டுசேர்க்கின்றதே. (௬௭)

நிதிகொண்டவண்மைத்தளவாய்குமாரனிலந்தழைக்குந்
துதிகொண்டதேவைரகுநாதன்மால்வரைத்தோகையன்னீர்
கதிகொண்டுதாமரைதாங்கிநின்றீர்செங்கலசவிம்ப
மதிகொண்டுதாங்குமின்மாலாமெனக்கலர்மாதென்னவே. (௬அ)

மழையணிவார்குழன்மின்னிடைமாதர்மருளவிசைக்
கழையணிதேவைரகுநாதன்வெற்பிற்கதிரொளியோ
டிழையணியாழின்விரலாலிசைத்துள்ளுருக்குகலாற்
றழையணிகானத்தவொனும்வாய்மைதகுமுமக்கே. (௬௯)

முத்திக்குவேலிதழைக்கின்றதேவைமுதல்வனருட்
பத்திக்குவாய்த்தரகுநாதசேதுபதிவரைமே
லெத்திக்குங்கண்டறியோமணங்கேபச்செனுங்குழைசே
ரத்திக்குஞ்செம்மலர்காட்டிநின்றுயின்றதிசயமே. (௭0)

மையாழிவையம்புகழ்செம்பிநாடன்மறந்தும்பொய்யா
மெய்யால்விளங்குமரகுநாதன்வெற்பில்வெங்கோவடையக்
கையாரவேநின்றிசைத்திடக்குன்றங்கவிகைசெய்தாற்
பொய்யாதினிச்சொல்லலாங்கண்ணனொன்றுபூங்கொடியே. (௭௧)

பலவுங்கமுகும்பசும்பனிக்கோடும்படைத்துநின்று
நிலவுங்கரந்தைரகுநாதன்காக்குநெறியியல்பா
யிலவுந்துகிரும்பொருமிதழாய்நின்னிருகையினுங்
குலவும்படிசெங்கதிர்மாழையேந்திக்குலாவுவதே. (௭௨)

காக்குங்கருணையுங்கல்வியும்வாழ்வுங்கவிமதுர
வாக்குந்தழைத்தரகுநாதன்றேவைவருவிருந்தாத்

தேக்கும்படிகனிவாயமுதாரவுந்தேற்றினமை
நோக்கந்தனைமறைத்தாலியல்போநுஞ்சிறுண்ணிடையே. (௱௩)

பன்னுந்தமிழ்ப்பயிர்வாடாதுமாரியிப்பாரின்முத்தும்
பொன்னுஞ்சொரியுமரகுநாதன்றேவைப்பொருப்பிலுயா
மன்னும்பெரியவரைநீத்துழுகண்மருவுகையாற்
பின்னுங்குழலணங்கேயறிந்தேனுன்றன்பேதைமையே. (௱௪)

தெளியேயகவொண்குடைகன்றுற்குளிர்செகமேழுமிசை
யொளியேபரவுமரகுநாதன்றேவையிலோங்குபசுங்
கிளியேயெனுமொழியீரிங்காஇன்றுகேழ்கிளர்கண்
ணளியேமறைத்ததனுற்கொடியாளொன்றறிந்தனமே. (௱௫)

வேரிப்பசுந்துணர்வார்குழலீர்கலிவெப்பொழிகரு
மாரிப்பருவம்ரகுநாதன்றேவையில்வண்குடத்தே
பூரிப்பநெஞ்சிற்கருகாமனஞ்சிற்புரிந்ததுகை
நீரிப்படிக்கலந்தாற்பிறிதேதுநிகழ்த்துவதே. (௱௬)

ஆர்க்குங்கலாபமயிலனையீர்பகிரண்டமெல்லாம்
போர்க்கும்புகழ்தளவாய்ரகுநாதன்பொருப்பிலணி
சேர்க்குந்தனங்கண்மலைபோற்கணமுடித்திறக்குமுன்னே
பார்க்கும்படியிப்படிக்கண்டிலேமொருபாரினுமே. (௱௭)

திவளக்களிவண்டிசைபாடத்தானந்தினம்பொழியுங்
கவளக்கடாசலத்தான்ரகுநாதன்கரந்தையன்னீர்
தவளக்குளிர்முத்தமல்லாமலந்தந்தனிற்சிறந்த
பவளக்குலமும்படுவதுண்டோமலர்ப்பங்கயத்தே. (௱௮)

ஒன்னாருயிர்விடச்செங்கையில்வேலையுறைவிடுங்கைப்
பொன்னுடர்தாருரகுநாதன்றேவைப்பொலங்கிரிவேள்
வின்னுண்மறைத்தகரும்பனையீரந்தவேள்வனச
வன்னுண்முலையென்கொலோவினையேனுயிர்வாட்டுவதே. (௱௯)

சினத்தாமரையவொல்லாந்தனையேதொழச்செங்கடுக்கை
யினத்தாமரைத்தொழுமால்ரகுநாதனையெண்ணலர்போங்
கனத்தாமரையிருள்வார்குழலீர்கட்கருஞ்சுரும்பென்
மனத்தாமரைபுகுமென்றோகையாரமறைக்கின்றதே. (௱௰)

தரியார்வணங்குந்தளவாய்குமாரன்செந்தாமரையாள்
பிரியாததேவைரகுநாதன்வெற்பிலென்பேரறிவாம்
விரியாழிமாயக்கயல்சூடியாதுவிலக்கியபின்
கிரியாலுழக்குதனன்றோமழலைக்கிளிமொழியே. (௱௰௧)

தக்கமலவயற்றேவைகாவலன் செந்தமிழுந்
தக்கலையும்வல்லான்ரகுநாதன்கிரியினெடுங்
தற்கடல்வெள்ளநீந்துகற்கேகுடங்காட்டியநீ
பதக்கவலையொளித்ததென்னோபுகல்பெண்கொடியே. (௱௰௨)

மாய்தோய்பகைஞர்வரையுரம்பாய்ந்துருமைறப்படுத்துங்
கைகோய்கடாசலத்தான்ரகுநாதன்காந்தைமவெற்பின்
மெய்தோயநின்றவுயிர்வாடுமென்பதும்விட்டிங்ஙனே
மைதோய்மழைக்கண்மறைத்தனன்றேசிலைவாணுதலே. (௱௰௩)

யத்துக்கிசைந்தபுகழ்களவாய்தந்தமைந்தன்மிக்க
சயத்துக்கொருதுங்கவேள்ரகுநாயகன்றேவையிலம்
யத்துக்குவலயந்தார்புனைந்திரிப்பொறையமைத்தா
யத்துத்தருமனென்றேமடவீர்சொல்லுநாணிலமே. (௱௰௪)

சல்கொண்டநீலக்கடல்சிவப்பேறச்சிலைதிணித்துக்
ால்கொண்டதேவைரகுநாதன்வெற்பிற்கருவிளம்பூ
மேல்கொண்டசாந்தட்குலத்தோடுங்கூடவிளங்கிழையீர்
ால்கொண்டகாலத்துமென்னோமணக்கமலர்த்திலவே. (௱௰௫)

ரைவந்தமுத்தும்வரைவந்தபொன்னுந்தெவ்வேந்தர்தந்து
ரைவந்துபோற்றும்ரகுநாதன்றேவையினேரிழையீ
நரைவந்துதேற்றவுணர்த்திரென்னெஞ்சமுழலவைத்த
வரைவந்தலரியென்கண்ணனதென்னகண்மாயமிதே. (௱௰௬)

வெங்கயங்கேதம்பொருந்தாதருள்புகழ்வேந்துயர்த்த
செங்கையங்கேதனமால்ரகுநாயகன்றேவைவெற்பிற்
பங்கயங்கேகயம்போல்விரமுதம்பசுங்கணின்ற
கொங்கையிங்கேவிட்டிருந்ததென்னோகண்குவலயத்தே (௱௰௭)

ளைப்பாரமுட்குடமூற்றுசெந்தேறல்சுனைப்பரந்து
திளைப்பார்கரந்தைரகுநாயகன்றமிழ்த்தேவையன்னீர்
முளைப்பாரையென்றும்புதைக்கப்படாதென்றுமுழுதுணர்ந்தோர்
விளைப்பாரையின்றுபுதைத்தேதனத்தைவிடுகின்றதே. (௱௰௮)

வங்கந்தழுவுங்கடல்சூழுந்தேவைக்குவாய்த்ததள
சிங்கங்கருணைரகுநாதன்செம்பொற்சிலம்பின்மலர்க்
கொங்கங்கமழுங்குழலீர்முகத்தைக்குபேரனெனச்
சங்கம்பதுமமும்வேண்டுமென்றேகண்ணிற்சார்கின்றதே. (௱௰௯)

கடந்தோய்மதகளிறன்னநந்தம்பரகண்டன்முத்து
வடந்தோய்தனத்தியர்வேள்ரகுநாதன்வரையனையீர்

தடந்தோயமுற்களமையாதென்றே நிறந்தாழுமல
ரிடந்தோயவின்றுமதுகரங்கூடியிருக்கின்றதே. (௱௨௰)

சீதகங்காதரற்கன்பாம்ரவிகுலசேகரன்பூ
மாதகஞ்சேர்புயத்தான்ரகுநாதன்மணிவரைக்கோ
மேதகஞ்சேர்குழையீரசிமாவொடுமெல்லியகைப்
போதகஞ்சேர்ந்தபகையில்லையோவுங்கள்பூம்புனத்தே. (௱௨௧)

தருபாற்புதுமுத்துந்தொன்னுள்வயிரமுந்தந்துதெவ்வ
ரிருபாற்பரவும்ரகுநாதன்றேவையிலேமவெற்பில்
வருபாற்குறுந்தொடியீருலவாவிந்துமண்டலத்தே
யொருபாற்கரனண்ணினுமெலன்படாதிவ்வுலகெங்குமே. (௱௨௨)

நேர்கின்றசிற்றிடையீர்முகினீருண்ணநீட்டுகைம்மா
லூர்கின்றதேவைரகுநாதன்வெற்பிலென்னுள்ளிரங்க
வார்கின்றவஞ்சனக்கண்மறைத்திரிந்தமாமறைத்தாற்
சார்கின்றபுண்டரிகத்தாலுமக்கென்னதாழ்வுமக்கே. (௱௨௩)

தோடார்பசுங்குழையீர்துரைராயன்சுரந்துநறை
யேடாருந்தாமன்ரகுநாதன்வெற்பிலிரவலர்க்கே
வீடாதுகுன்றத்திசையொளிதோன்றவிரும்பியத்தம்
வாடாதளித்ததனாற்சொலலாமுமைவள்ளலென்றே. (௱௨௪)

அதிரா விருந்தவிருட்குநல்லார்கலியாம்பனிக்குங்
கதிராயுதித்தரகுநாதன்றேவையிற்கைம்மலர்க
ளெதிராயதானுவிற்கேற்றலவஞ்சமிமையவர்க்கு
முதிராததீஞ்சொற்கிளியேபுனேதன்முறையல்லவே, (௱௨௫)

வஞ்சத்திசைமன்னரோடிடவாணர்வறுங்கலியு
மஞ்சக்கனகந்தரும்ரகுநாதனருட்கரந்தை
நெஞ்சத்தின்மாலென்றுணர்ந்திக்குடந்தந்துநீர்மலர்ப்பூங்
கஞ்சத்திளந்திருவென்றேநற்பரவையைக்கைக்கொண்டதே. (௱௨௬)

வெல்லும்பதாகைத்தளவாய்குமாரன்கைவேழமும்போர்
மல்லுங்கடந்தரகுநாதன்றேவையில்வல்லவர்க்குப்
புல்லும்படையென்பதோகொலைநாட்டம்புகைமறைத்துச்
சொல்லும்பொழுதணங்கேகுயத்தானுந்துயர்செய்வதே. (௱௨௭)

செங்கைத்தருவினிசைவல்லிசேர்தளசிங்கமலர்
மங்கைக்கினியரகுநாதன்றேவையில்வார்க்கடங்காக்
கொங்கைக்குநேரில்லையென்றேவிடுத்துவெங்கூர்விழிக்கு
மங்கைத்தலையின்றுநேரொன்றுகாட்டியதாரணங்கே. (௱௨௮)

களிக்குங்கயல்வெடிபோயுயர்வாளைவெண்கங்கைத்தெண்ணீர்
குளிக்குங்காந்தைரகுநாதன்வெற்பிற்குவலயங்காத்
களிக்கும்படிப்பெண்ணரசேதுணிவுற்றவ்வாழியுயி
ரொளிக்கும்படிவிடலாமோநெறியன்றுளக்கிதுவே. (௱௨௯)

கடமேவுதேவைப்பதிபுறப்போன்றளவாய்மகிழ்ந்
திடமேவுவெற்றிரகுநாதன்வெற்பிற்சிறியவனு
வடமேருவெற்புக்கெதிர்கிற்குமோவரிவாளரவப்
படமேவுமல்குன்மின்னேயுய்யுமாறின்றுபார்த்தருளே. (௱௩௰)

வரமேந்துவெற்றியரக்கர்பிரானுயிர்வாட்டவொற்றைச்
சரமேந்துதேவைரகுநாயகன்றமிழ்வீரைவெற்பி
லுரமேந்துநுங்கள்குலத்திடல்போவனத்துமேவரக்
கரமேந்திநின்றமடவீர்கலைகளவாகின்றதே. (௱௩௧)

வரிவளைநாளுமறுகடலோவியங்குமுத்தஞ்
சொரிதருதேவைரகுநாதன்வெற்பிற்சுருதிபயின்
றரிவளர்பூங்குழலாய்தமியேனையிங்காள்வதற்குக்
கரிவெளித்தோன்றப்பிணையேன்றொடர்ந்தின்றுகைக்கொள்வதே. ()

சொற்பாவலர்தங்கிளைவாழச்செம்பொன்சொரியும்வண்மை
நற்பேறுதேவைரகுநாதன்வெற்பினலந்தருமிப்
பொற்பாருநங்கையைச்சேர்ந்தானுயிரைப்புரப்பதல்லால்
விற்பாவியமணிவெங்காத்துடன்கொல்வீழ்விப்பதே. (௱௩௩)

கார்த்தாமவார்குழலீர்பசுந்தேனுமிழ்கானறுந்தார்
வேர்த்தாமமுல்லைரகுநாயகன்றமிழ்வீரையன்னீர்
பார்த்தாதரவொடுபோர்ப்பார்மறையிற்பரிந்தகத்தே
சேர்த்தாவென்றேதனத்தாரிவவேதஞ்செயிந்துணிவே. (௱௩௪)

சிந்தாடவந்தவர்தம்மோடெழிலைத்தெரிந்துகொள்ள
வந்தாடவர்பணிமால்ரகுநாதன்வரையனங்கே
பந்தாடல்கண்டனம்மாலையாடலும்பார்க்கவரந்
தந்தாடல்செய்யிலுனக்கெய்துங்காண்வெருகன்மங்களே (௱௩௫)

இல்லாரைக்கற்பகமாக்கியுடையரொளினுமிகப்
பொல்லாரைக்கொல்லுஞ்செயரகுநாதன்பொருப்பனையிர்
வல்லாரைக்கற்பவனையறிந்தேமுன்னுவாகடமா
கல்லாரைக்கோரியகையாந்தகரையுநாடுவமே. (௱௩௬)

விலைப்பாரரசரறியக்குனித்திகல்வென்றுலந்த
சொலைப்பாவலர்புகழ்மால்ரகுநாதன்சோனவனாக்குத்

தலைப்பாகைதுண்டமென்சோமன்முன்வத்திரந்தனிற்கலந்தான்
மலைப்பாரமாவணச்சேலையிலாதமணமெனவே. (௱௩௭)

கண்டரிகம்பவுவாவைத்தெறலிற்கருதலர்வாள்
கொண்டரிகம்பமிலாரகுநாதகுபேரன்வரைப்
பண்டரிகம்புளமின்னனையோரவத்தம்பார்த்திருந்த
புண்டரிகம்பிணைமேற்பாயத்தந்திபுறப்பட்டதே. (௱௩௮)

தீனத்தைவென்றகொடைப்புகழ்கேட்குஞ்செவிக்கமுத
பானத்தையொத்தரகுநாதசேதுபதிவரைவாய்க்
கானத்தைவானத்தைநேர்சொலிடையொருகன்னியத்த
மீனத்தைநாடிச்செலக்கும்பராசிவெளிப்பட்டதே. (௱௩௯)

மஞ்சாங்கருதலர்போர்ப்படைமேற்சண்டமாருதம்போல்
விஞ்சாங்கமூலபலரகுநாதன்வியன்சிலம்பிற்
பஞ்சாங்கமோதிமறைகாட்டிச்சொர்க்கமிப்பாற்படுத்தி
யஞ்சாங்குலத்தவர்பார்ப்பாரைச்சேர்ந்ததிசயமே. (௱௪௰)

பொருப்பவெதிர்வரல்போற்கஞ்சஞெல்வந்தபோதகத்தின்
மருப்பதொசித்தசயரகுநாதன்மணிபருவி
பருப்பதமீதுமலருஞ்செங்காந்தள்பரவையிற்பூத்
திருப்பதிசயங்காண்குன்றவாணரிளங்கொடியே. (௱௪௧)

காலாயுதத்தையிகன்மேற்றயித்தியர்நாட்டிலெதிர்
மாலாயுதத்தைப்புரிரகுநாதன்வரையணங்கே
வேலாயுதத்தைக்கைக்கொண்டுநின்றாயெதிர்வெற்புமெய்தாற்
சாலாயுதத்தையனென்றனையேதொழுங்காசினியே. (௱௪௨)

தொகுத்தளவாய்மகிழ்தெய்வீகத்தேவைத்துறைக்கரசச்
சகுந்தவிலோசனத்தான்ரகுநாதன்சயிலமின்னே
புகுந்திறையவர்தெரியாமன்மச்சபுரத்திருக்க
மிகுந்துரியோதனபாரவணிகள்வெளிப்பட்டவே. (௱௪௩)

அங்கசிங்கமலையாளமீழமனைத்தும்வென்ற
சிங்கவிசயசயரகுநாதன்சிலம்பிற்பொன்னே
சங்கிலியானையுங்கண்டேன்பரவைதனையுங்கண்டான்
மங்கலசுந்தரனென்றனையேதொழுமண்டலமே. (௱௪௪)

ஆலங்கையாதவமுதின்முன்னன்றுண்டலகையைக்கொ
லேலங்கையாதருண்மால்ரகுநாதன்வெற்பேந்திழையீர்
சேலங்கைக்கொண்டபின்னேமலையாளமுந்திண்டிக்கல்லைப்
போலங்கையாமஃதில்லாதபோதுபுலப்படுமே. (௱௪௫)

பாலூர்சங்கிராமவிசைசூதர்பாடப்பவனிவரு
மாலூர்நகுலனெனும்ரகுநாதன்வரையணையீர்
கோவூர்முன்காட்டியபின் சன்றத்தூர்வழிகூட்டியப்பா
ஞலூர்நுங்காஞ்சிபுரங்காட்டுதேருணைடைநாட்டியவ்பே. (௱சசு)

எண்கட்டுமானபுற்றோன்றுடலர்பனடயேங்கவிதே
திண்கட்டுவாங்கத்துரைரகுநாதவசிரன்வரைப்
பண்கட்டுமென்மொழியீர்நீர்மிகவும்பலரறியக்
கண்கட்டுவித்தையுஞ்செப்பிடுவித்தையுங்கற்றவரே. (௱சஎ)

தாவியங்கற்றமிலாமற்பொருதச்சமரிலறை
கூவியங்கத்திகல்வெல்ரகுநாதகுமுணன்வெற்பி
லோவியங்கற்பகவல்லியன்னீரிவ்வுலகியற்கை
காவியங்கற்றவர்க்கேயத்தமாகுங்கடபடமே. (௱சஅ)

கண்டரிதங்கையுரத்தையுமூக்கையுங்காதையும்வாட்
கொண்டரிகொணடல்ரகுநாதன்றேனைக்குலவரைப்பூ
வண்டரிகுற்குழலீர்தும்முந்திமடியலேயாற்
புண்டரிகங்கண்முழுகத்தெரியும்புளினங்களே. (௱சகூ)

நாளத்தையம்புயவன்னப்பணைச்செம்பிநாடன்சக்கர
வாளத்லைதவென்றபுயரகுநாதன்மணிவரைவேள்
காளத்தைவெல்லுரைநாடகப்பாவையைக்காட்டுஞ்சும்மா
தாளத்தையேந்திநின்றீர்மத்தளமுந்தருகுவனே (௱ருய)

இடனுகமற்றைவலனுகச்சாரியியற்றிடுவாட்
டிடனுகவமெச்சியல்ரகுநாதன்சிலம்பிற்பெண்ணே
கடனுகத்தங்கவரையெதிரோவரக்கண்டுமுறி
யுடனேகொடுக்கவுடையார்பிணையையொளிப்பதென்னே. (௱ருக)

படியுமமரருலகமுமிசையும்பாதலமுங்
கெடிகொளிசைரகுநாதவசிரன்கிரியணங்கே
கொடிபுமுரசுங்கணையுஞ்சிலையுங்கொடாமலணி
முடிமாத்திரமதவேளுக்களித்தன்முறையல்லவே (௱ருஉ)

கேட்டத்தகுவருமுட்குமதுகைக்கிளர்புலவர்
பாட்டத்தகுதிரகுநாதசேதுபதிவரைவாய்
காட்டத்தகுவலேவேழங்குவலேநளினமல்லி
காட்டத்தகுமிளநீரொன்றுகாட்டல்கணக்கல்லவே. (௱ருஙு)

ஆரங்கராசலமாநிதியீரர்க்களித்திகன்மேற்
போரங்கமாகவருரகுநாதன்பொருப்பணையீர்

பேரங்கமாகும்பகோணத்திற்பாதியைப்பின்மறைத்தீர்
சாரங்கபாணியெனும்பேரெவ்வாறுதகுமுமக்கே. (௱௫௪)

சேண்டவர்வாழ்திருக்கேவையையாருந்திருமணிமார்
பாண்டவர்தூதன்ரகுநாதசேதுபதிவரைவாய்
நாண்டவர்முன்னிட்டகிலேயொளித்துத்தன்னற்பெயனைப்
பூண்டவர்தானத்தைத்தான்வாங்கிக்கொள்ளப்புறப்பட்டதே. (௱௫௫)

விலையைமறைக்குங்கனகிரீடவிவேகத்தெண்ணெண்
கலையைமறைக்குமனுரகுநாதன்கவின்வரைவாய்ச்
சிலையைமறைக்குநுதலீர்முன்றுகத்தெரிதலின்றி
வலையைமறைத்துவைத்தீர்பற்றவோசக்கிரவாகத்தையே. (௱௫௬)

படமினியார்வணங்கெண்டிக்குங்காட்டெழிற்பார்த்திபன்கைத்
திடமினினீண்மந்திரவாள்ரகுநாதனற்றேனைவெற்பிற்
றொடமினியோங்குமணியீர்மைவாரியைத்தூர்த்தபின்பு
குடமினியேதுக்குநீரோவலியக்கொடுக்கினுமே. (௱௫௭)

வெம்பிற்கரளமெனக்காய்ந்திகலைவிடுத்துத்தன்னை
நம்பிற்கருணைபுரிரகுநாதநரேந்திரன்வெற்பிற்
கெம்பிற்கனகமணிபணியீர்முனங்கேசவன்கை
யம்பிற்கரன்படவெற்பரணங்களகப்பட்டவே. (௱௫௮)

கல்லாரங்காட்டியபம்பரத்திற்சுழல்வாம்பரிமேற்
செல்லாரங்காட்டுமுராரகுநாதன்றன்றேனைவெற்பில்
வில்லாரங்காட்டுமணியீர்மதிப்புமிகுந்ததனைக்
கல்லாரங்காட்டியநீரோகல்லாரமுங்காட்டினன்றே. (௱௫௯)

அலசத்தைவாளியெனநேர்நவையையகற்றியறி
நலசத்தையேகொண்மகிழூகியாம்ரகுநாதன்வெற்பிற்
பலசத்தைநீடுமுவரிமதித்தும்பருக்குவைத்த
கலசத்தைக்காட்டியமுதத்தையேதுகரந்ததுவே. (௱௬௰)

தவளையிற்செல்வளர்காவினிற்றுலத்தரளமுதிக்
கவளையிற்செல்செம்பியான்ரகுநாதன்கனகவரைத்
துவளையிற்செல்பவராமனையீர்மலர்தோறுந்திரி
குவளையிற்செல்வண்டுகோங்கிற்செல்லாததென்கூறுகவே. (௱௬௧)

வண்டிறகாலவலர்முல்லையான்கவிவாணர்செய்யுட்
கொண்டிறவீகைதருரகுநாதகுபேரன்வெற்பிற்
பண்டிறவாமருந்தன்னீர்வெந்தாகப்பசிதணிக்கக்
கண்டிறவாமலிளநீர்கொடுத்தென்கவையில்லையே. (௱௬௨)

மித்திரமன்னர்மகிழப்பகைஞர்முன் வீழ்ந்துதாழச்
சத்திரமன்னவருரகுநாதன்சயிலவெற்பிற்
சித்திரமன்னகுரீஇமேலனத்தைத்தெரியவைத்தாய்
பத்திரமன்னவுயிர்வுறிற்சேதப்படைத்தவர்க்கே. (௩௬௩)

தளையாடுகாவலொடொன்னார்நிறைகட்டிற்றமுகத்திற்பொற்
கிளையாடுமேதவைத்துரைரகுநாதன்கிரிவெற்பில்
வளையாடுகைத்தலத்திற்பாச்சிகைக்குன்மறைத்துமனம்
விளையாடச்சூதின்கணகவடங்கள்வெளிப்பட்டவே. (௩௬௪)

அனமிகத்தோன்றுவயற்செம்பிநாடனயன்றங்கதவா
கனமிகத்தோன்றுதுசரகுநாதன்கனகவெற்பின்
மனமிகத்தோன்றுமொருமாமலருண்மறைந்திடவி
தனமிகத்தோன்றுமபிமானமுள்ளவர்தங்களுக்கே. (௩௬௫)

தேவுளிருக்கும்வளர்செம்பிநாடனற்றவையுள்
பூவுளிருக்கும்வளரகுநாதன்பொருப்பனமே
மாவுளிறைவர்க்கெதிர்வைத்துக்காணல்வழக்கிதன்றிக்
கோவுளிருக்கவிங்கேதுக்குமாலிகுசக்கனியே. (௩௬௬)

சிற்றுலவட்டங்குடைகொடிசாமரஞ்சேரப்படை
நற்றுலமென்னவருரகுநாதன்மைக்காகமின்னே
கற்றார்பணிநற்றிரிகூடவெற்பெதிர்காட்டித்திருக்
குற்றாலமாந்தலமுங்காட்டினனிட்டைகூடவனே (௩௬௭)

வில்வழக்கத்திற்றனஞ்சயர்கன்னன்விதுரனெனச்
சொல்வழக்கத்துரைமால்ரகுநாதசுகுணன்வெற்பிற்
செல்வழக்கக்குழலீர்சாட்சிகைப்பத்திரமினைவயில்
வல்வழக்கிட்டுவெளிப்படுவார்முழுவம்பர்களே. (௩௬௮)

கிக்கிரகமேனையநுக்கிரகமாமநுநீதிபுரி
யுக்கிரகமகாதளவாய்ரகுநாதன்வெற்போதிமமே
சக்கிலியாயினர்பார்ப்பாருக்கைக்கொளச்சம்பந்தத்தா
லக்கிரமமென்றுகுயவரிதைவெளியாக்கினரே. (௩௬௯)

சொற்பதக்கற்பனையோரெழுத்திற்கத்சஞ்சோர்விலா
மற்பதக்கத்தந்தருரகுநாதமகிபன்வெற்பி
னிற்பதக்கற்பகவல்லியன்னீர்வெகுநேத்திநுங்கைப்
பொற்பதர்க்கங்கொளமார்பிற்கடகம்புறப்பட்டதே. (௩௭௰)

பூமான்பெருஞ்செல்வம்பாமான்கவிகள்பொருட்கொடைக்குக்
காமான்கரதலமால்ரகுநாதன்கவின்வரைவாய்

மாமான்மசமயிலேயெதிர்கொள்பவர்வைத்தனரோ
கோமான்வெளிப்படுமுன்னெதிர்பூரணகும்பங்களே (௱௭௧

விட்டங்கொடுக்குமுனிவைமுன்னம்பியவீடணற்கும்
பட்டங்கொடுக்கும்ரகுநாதசேதுபதிவரைவாய்
வட்டங்கொடுக்கும்பணத்திற்குமேற்றனம்வண்டர்நட்பா
லிட்டங்கொடுக்குமைமேனாட்டவர்க்கும்வந்தெய்தியதே. (௱௭௨

நூலாயிருக்குநர்க்கத்தகிசஞ்சதநூறளிக்கு
மாலாயிருக்கும்ரகுநாதன்றேவைவளாமயிலே
மேலாயிருக்கினும்பார்ப்பாரிரவலர்மேலன்றிக்கீழ்
போலாயிருக்கினுமீகைத்தனத்தர்புரவலரே. (௱௭௩

போரூருடுசென்றுலவனைப்போலத்தைபுத்திரற்குத்
சேரூர்சலதரமாலரகுநாதனற்றேவையன்னீர்
நீரூர்மைநோக்கரும்வெட்கியொளிக்கநிதானத்திலே
யோரூசிமேலிருபம்பரபாட்டுமுபாயநன்றே. (௱௭௪

இசைபுகழ்கன்னன்குபேரன்விசயன்சிபியெனச்சொல்
லிசைரகுநாதன்மணிவரைமானனையீருமது
வசைதீர்சசர்னவித்தைனயப்பார்த்துமகிழ்ந்தனமேற்
பசையுறுகோகர்னவித்தையெப்போதினிப்பார்ப்பதுவே. (௱௭௫)

முடிக்கவருதிரண்மல்லினராவிமுடியவறை
கொடுக்குமாரரகுநாதன்வரைமலர்க்கொம்பனையீர்
அடுக்குங்கொனீர்சணையாழிமுகத்திட்டடக்கியபி
னிடுப்பினிற்குண்டலமார்பிற்சிலம்புவந்தேறியதே, (௱௭௬

திடமுமுரமுமிசையுங்கொண்டச்சமூர்த்திமையுங்க
படமுமொழித்தரகுநாதசேதுபதிவரைவாய்க்
செடவாத்தியமறிவித்திரிணியுங்கள்கிதத்தையு
மடவீரறிவிக்கினுன்கொட்டிக்காட்டுவன்மத்தளமே, (௱௭௭

சங்கையிலாமலிரப்போர்க்குதவவுதாரநிதிப்
பங்கயமன்னரகுநாதசேதுபதிவரைவாய்
மங்கைநல்லீரிதுநல்லாச்சரியமுண்மையுங்களைக்
கங்கைகடக்குமுன்னேசித்திரகூடமென்கண்ணுற்றதே. (௱௭௮

வெம்மையுடையகைவேலாலொன்னார்பொன்மணிமுடிக்குப்
பைம்மையறுத்தரகுநாதசேதுபதிவரைவாய்
நைம்மையுடையநாசப்பீர்வரச்சங்காடுவதிற்
கைம்மையுடையவர்க்கேனணிமைபெய்தங்கச்சிமிழே (௱௭௯

ங்கிரத்தினப்பகுகிகொணர்ந்துமுனெணணிமன்னர்
ங்கிடுமுற்றரகுநாதசேதுபதிவரைவா
ங்கிதமாகத்தருசடகோபங்கண்டாச்சுதுமுன்
ங்கிடுதோளிட்டசக்கரங்காட்டத்தகுமினியே. (௱௮௰)

ளையுண்டிடநவநீதந்திருடிமுன்றையசியோனைத்
ளையுண்டமெய்ரகுநாதன்சிலோச்சயத்தையனல்லீர்
ளைசெண்டுமீன்சொன்மதுரைவடைத்துவரிமுன்வென்றீர்
ளையுண்டமேருவும்வென்றிடினீரந்தத்தென்னவரே. (௱௮௧)

மையவனாகிமிடத்திலொன்னார்மெய்குவியக்கைம்மேற்
மையவனாகிருபன்ரகுநாதன்றடவரைவா
மையவனாயுயர்சொர்க்கமுன்காட்டியருளியநீ
மையவனாயொளிக்கத்தகுமோசொலுமேந்திழையே (௱௮௨)

ளவாய்வருமிகல்கன்றுலெறிந்துமுன்வென்றுவந்த
ளவாயரசர்பிரான்ரகுநாதன்றடவரைவாய்க்
ளவாய்தனிலுங்கள்விற்குளச்சேல்கள்குதிக்குமென்றோ
ளவாய்மறைத்துவைத்தீர் மடவீர்நுகைப்பிடித்தே (௱௮௩)

காவைத்துறைக்குப்பதினாயிரம்பொன்கொடுத்திசைகொ
டவைத்துறைக்குத்துரைரகுநாதன்கிரியின்னே
யவைத்துறைக்குள்வெறிகொண்டுசெங்கிலியேந்துமத
ரவைத்துறைக்குவெளியேவிடிற்பழிவந்திடுமே. (௱௮௪)

டைமுன்னர்கின்றுமுடிமேற்றமதிருகைகுவித்துப்
டைமன்னர்போற்றும்ரகுநாதசேதுபதிவரைவா
டைதான்குறைந்ததுமச்சமுங்காட்டுவதில்லையென்றுன்
டவிருமதுதனத்தையெவ்வாறுமதிப்பதுவே. (௱௮௫)

மரர்மனிதர்நரரமுதாசநராகவுக்கிர
மர்செய்செயரகுநாதன்சிலோச்சயத்தையனல்லீர்
மனையடக்கிக்கடலுருங்காட்டியஞாயத்தினை
மையிவ்வுலகிலமுதகடேசனொன்றோதுவரோ (௱௮௬)

ரஞ்சுகண்டனிறக்கவிண்ணோர்குடியேறமகி
ரஞ்சுமக்கும்ரகுநாதசேதுபதிவரைவாய்
ரஞ்சுதாரிப்பதின்றிமுன்கேடகம்விட்டெறிந்து
பாரஞ்சுவாரிற்கைவாளையொளிப்பதென்பூங்கொடியே (௱௮௭)

சன்றத்தைக்கண்டகப்போரிற்றின்ந்தள்ளிச்செய்யமர்நா
ரின்றத்தைக்கண்டரகுநாதன்மால்வரைநேரிழையீ

றொன்றத்தைக்கண்டிருக்குச்சூர்செங்கற்பட்டுயர்ந்தகழுக்
குன்றத்தைக்கண்டனன்காண்பதெப்போதினிக்கோவளமே, (௱அஅ)

செல்லூரப்பார்த்திபராகுமொன்னுருயிர்தின்னநமன்
பல்லூரப்பாற்கொல்ரகுநாதசேதுபதிவரையி
ரல்லூரைப்பாம்பொன்னையிரிப்போதுங்களத்திப்பட்டு
வல்லூரைப்பாத்தனன்பார்ப்பேனினிநெய்தல்வாயலையே. (௱அகூ)

செல்லக்கைம்மாறுபடையார்க்குதவுமைசேறலரை
வெல்லக்கைபோயவைவேல்ரகுநாதன்விலங்கற்பொன்னே
நல்லக்கைவைத்தப்படியெய்துமீளுவனுமது
பல்லக்கைக்காட்டியனுப்புமெனவெளிப்பாசறைக்கே. (௱கூ0)

கோசிகமக்தபணிசூறையிட்டெதிர்கூடலர்தம்
பாசறையிட்டரகுநாதசேதுபதிவரைவா
யாசிரியத்தின்முன்கூவிளங்காட்டியருளியநீர்
மாசில்கருவிளமுங்காட்டிற்காரிகைவாசிப்பனே. (௱கூக)

கார்நிரைபத்தைத்துரத்தியெடுத்ததன்கைவரையாற்
பார்நிரைகாத்தரகுநாதசேதுபதிவரைவாய்
நேர்நேர்நிரைநேர்நிரைநிரைமூன்றையுநீக்கிப்பின்னு
நேர்நிரையொன்றையுங்காட்டியவாறென்னநேரிழையே. (௱கூஉ)

வல்லியத்தானையிலொன்னலர்கெட்டுப்பின்வாங்கவடு
பல்லியத்தானைரகுநாதசேதுபதிவரைவாய்ச்
சொல்லியத்தானையழைக்குமுன்மாமிதொடருதல்போ
லெல்லியத்தானையசையாமலேதுக்கெறிகயிறே. (௱கூ௩)

சித்தியைக்கண்டமொன்பானிற்செய்வோருநற்சேதுவிற்செய்
பத்தியைக்கண்டரகுநாதசேதுபதிவரைவாய்
நத்தியைக்கண்டமணிகோகனகம்பொன்னுமணி
பத்தியைக்கண்டமாவுங்கண்டாலரியாகுவமே. (௱கூச)

முத்தமரகதமாணிக்கஞ்சொன்னமுடிநிருபர்
நித்தமெதிர்பெய்ரகுநாதன்மால்வரைநேரிழையி
ருத்தமராயினர்சாணர்சண்டாளருபர்மகுட
வத்தனர்தாழ்ந்தனர்பாரும்கலியுகவஞ்சனையே (௱கூரு)

காலாலுலகையளவிட்டமாலெனக்கைவளர்செய்
கோலாலளவிட்டமால்ரகுநாதன்குவட்டனமே
மேலாம்வருணத்தர்மாலைமுன்காட்டிவிதிப்படிப்பின்
னாலாம்வருணத்தர்மாலையுங்காட்டுதனல்வழக்கே. (௱கூசா

இக்கசமாமைமகமேனத்திரிசேடன்மகிழ்,
மிக்கவளர்புகழ்வேள்ரகுநாதன்மைவெற்பணங்கே
கைக்களச்சாதிநன்னெய்தலைக்கொண்டதுகண்டிடையர்
தக்கதென்றக்கணமேபார்க்குடங்களைத்தாங்கினரே (௱௯௭)

வென்றேந்தினமிகவென்றிறுமாந்தமர்வேந்தர்திரு
பன்றேந்திகழ்மெய்ரகுநாதசேதுபதிவரைவாய்
வன்றேந்திசையிசையுஞ்சொலைக்கிரண்டர்வாழ்த்தயர்
குன்றேந்திமாலெனமேலொளிர்திருயர்நோக்கினரே. (௱௯௮)

வனசம்பழனம்வளர்செம்பிநாடன்மலிசெல்வத்துட்
பனசம்பழனம்ரகுநாதசேதுபதிவரைவாய்க்
கனசம்பழனம்புயர்கோப்பொருளிடங்கண்டுகொண்டோ
மனசம்பழனம்பவுதாளிடமுமறிவதென்றே. (௱௯௯)

சொற்புதனுங்கல்வியிலென்றதுதினந்தோறுமன்னி
யற்புதமன்னர்பணிரகுநாதனணிவரைவாய்க்
கற்புதருநகையீர்நிலையாமைமுன்காட்டவந்த
புற்புதநிற்கநிலையாமுந்நீரெங்குப்போகியதே. (௨௱)

சேதுவையாளலர்மாதிருநால்வளர்சேதுவையாண்
மாதளவாய்ரகுநாத்கிரீடிவரைவருமுற்
பாதளமின்னேதண்டுலம்வாங்கச்சொற்சுயம்பாகியென்றே
யோதனங்காட்டியநீகழுநீரையொளித்ததென்னே. (௨௱௧)

நாகறமுந்துதமிழோரின்மைக்கங்குனையச்செய்தி
வாகறமைந்துமிகுரகுநாதன்வரைமினன்னீர்
சாகரமுந்தியடைத்தீரிலங்கைமன்சந்தமணிச்
சேகரமுந்தகர்த்தாலுமையேரவிசேயென்பரோ (௨௱௨)

மாணிலமெங்குமந்தாநிலந்தங்கமகிழ்செம்பியர்
கோனிலம்பாட்டைத்தெருரகுநாதன்குவட்டணங்கே
கானிலங்கார்கடலூர்க்கண்டநாமக்கலையர்கண்டாற்
றேனிலங்கார்திருத்தொண்டத்தொகையுந்தெரிந்தவரே. (௨௱௩)

ஆவசியம்பொன்னையூர்வசிபூர்ப்பெயரார்க்கருளிப்
பாவசியங்கொள்ரகுநாதசேதுபதிவரைவாய்ப்
பூவசியஞ்செய்தனவசியந்தரப்பூண்டதுபோர்
கோவசியந்தரப்பூண்பதெப்போதுசொற்கோகிலமே, (௨௱௪)

பிங்களத்தால்வந்தடைந்தோர்குடும்பப்பிரதிட்டைசெய்யக்
கங்கணங்கட்டுசெங்கைரகுநாதன்கவின்வரைவாய்

மங்கைகள்வீருங்கனரத்தினகரத்தைமறைத்துவரச்
சங்கடங்காட்டத்தகுமோவிரப்பவர்தங்களுக்கே. (உ௱ரு)

தோமினியார்செயினுஞ்சிறஞ்சேதிக்கத்தோன்றுமுனை
மாமினினீள்வடிவாளரகுநாதன்வரைமடவீர்
தேமினிதாமெய்யமலையைப்போற்றித்திவாமுன்முறை
யாமினியேவனநீலியைப்போற்றுதும்யாமினியே. (உ௱சு)

மகமிலைமேலவளர்செம்பிநாட்டிறைவாகுவென்று
நகமிலைவீரரணகேசரிரகுநாதன்வெற்பிற்
சகமிலையஞ்செயமேலாயுயர்ந்ததனம்படைத்தா
சுகமிலையென்றுசொல்வாரோவுலகிற்சுடர்த்தொடியே. (உ௱எ)

வேற்சேரலர்மச்சர்கொங்கர்வங்காளர்விறற்சமுகப்
பாற்சேரபயரகுநாதசேதுபதிவரைவாய்
நூற்சேரவையினுநூம்பிலொன்றுளதுகப்புடையீர்
காற்சேரளித்தரைக்காற்சேர்கொடாததுகைதவமே. (உ௱அ)

குலத்தைத்தந்தேவர்கொளச்செம்பிநாட்டுக்குடிகளுக்கு
நலத்தைத்தந்தாருமனுரகுநாதன்மைமர்நாகத்திற்சை
வலத்தைத்தந்தார்குழலீர்முன்பதக்கவலைதென்றுள்ள
கலத்தைத்தந்திரிருதுணியுந்தாருங்கணக்குடனே. (உ௱கூ)

கருக்குஞ்சிலீமுகமன்சொலிநட்டைமுன்காத்திகலை
நருக்குஞ்சிலீமுகமன்னப்பெருரகுநாதன்வெற்பிற்
பருக்குஞ்சிலீமுகங்காட்டியநீமறைபாணிக்குவே
யிருக்குஞ்சிலீமுகங்காட்டாதிருப்பதென்னேந்திழையே. (உ௱ய)

வேங்காதிவேந்தர்பரவுஞ்சமூகவிசயன்மனு
மாங்காதிகள்புகழ்வேள்ரகுநாதன்வரைமடவீர்
காங்காரியாய்த்துரியோதனமால்பெற்றுக்காட்டியவற்
காந்தாதையைமுன்னமேகாட்டியதிங்கதிசயமே. (உகக)

மூன்றுரியைச்சிலையாகச்செய்தோன்வெட்கமுன்சிலையைப்
பின்றுரியாகச்செயும்ரகுநாதப்பிரபன்வரைப்
பொன்னேதிணைநற்கரும்பைத்தராமற்புழுமிலகு
பன்றுடைமூடுகுரும்பைதந்தாயென்னபாக்கியமே. (உகஉ)

வஞ்சனையாகவருங்கொடியோர்கண்மணிபிழக்க
வெஞ்சரமேவுசெயரகுநாதன்வியன்சிலம்பிற்
கஞ்சமலர்மனைவிட்டுமுன்னுனைகனியனிய
நஞ்சதிடாமற்செந்தேங்காயையேதுக்குகல்கியதே. (உகங)

சுரதத்தில்வேள்கல்வியிற்போசன்றந்திற்றுவரையர்கோன்,
சரதத்தில்ராமனெனும்ரகுநாதன்சயிலமின்னே
பரதத்திலாவதரிந்தோருஞ்சிவநிசிப்பத்தர்புரி
விரதத்திலாவதுநீயேயறிவிக்கவேண்டியதே. (உகச)

கலையைமுன்காட்டுமதிபோற்றுளக்கலிங்கமே
னிலையைமுன்காட்டும்ரகுநாதன்மால்வரைசேரிழையீர்
மலையைமுன்காட்டியடைத்திட்கடலென்மந்திரக்கா
லலையைமுன்காட்டியதுபோலக்காட்டுமெனையின்றியே. (உகரு)

தங்காவியன்னநிறைசெம்பிநாடன்சரணடைந்தோர்
பங்காவியன்னரகுநாதசேதுபதிவிருதாஞ்
செங்காவியன்னமணிகானைசேர்க்கச்சேவகமுன்
கொங்காவியன்னகுழலீரதுவுங்கொடுக்கினன்றே. (உகசு)

கிடைக்குங்கிடைக்குங்கிளர்செம்பிநாடன்கொடிப்பயந்தன்
படைக்கும்படைக்கும்ரகுநாதசேதுபதிவரையீர்
புடைக்கும்புடைக்குந்துரைத்தனநீர்தரப்பூரித்தநான்
கடைக்குங்கடைக்குமமைச்சனாயுந்தரிக்கைக்கொள்வனே, (உகஎ)

கூணந்தந்திரமலிநதிச்செம்பியர்தோன்றலிசைக்
காணந்தந்தீரஞ்செவிரகுநாதன்கவின்வரைவாய்
வாணந்தந்தொனநுண்ணிடையீர்நன்மணிக்கனகத்
தாணந்தந்தீரினங்கோதானமுந்தரிற்றானமெய்யே. (உகஅ)

பொன்னிக்குப்பொன்னித்திலமணியீதன்புனற்செம்பியான்
சென்னிக்குச்சென்னியெனும்ரகுநாதனற்றேவையன்னீர்
வன்னிக்குமுன்றனமீந்தீர்சொற்காவியம்வாசிக்கநீ
குன்னிக்கவிஞனெனக்காட்டிற்கூடற்குடையவரே. (உககூ)

கடமுந்திசையெனப்பொற்சதங்கைத்தொனிநல்கமுன்ச
கடமுந்துபங்கசத்தான்ரகுநாதன்கவின்வரைவாய்
வடமொழிதென்மொழியாஞ்சுகமாமுன்பின்மார்க்கப்படித்
திடமுன்புகண்டனம்பின்னென்றுங்காணட்டுஞ்சேயிழையே, (உஉ௰)

சித்தியமாண்மையவுதாரியநன்மைகீர்த்தியைந்து
நித்தியமாகும்ரகுநாதன்மால்வரைசேரிழையீர்
சத்தியமில்லையனியில்லைமெய்யுண்மைசாட்சியில்லை
யத்தியும்வம்புமுடையீருமக்கிங்காசில்லையே. (உஉக)

கொடைக்கஞ்சியமுகிலார்பொழிற்செம்பியர்கோமகனைத்
தொடைக்கஞ்சியமெய்ரகுநாதன்மால்வரைத்தோகையுன்ற

னடைக்கஞ்சியபிடிகுத்துணப்பார்த்தனாடட்டுமே
விடைக்கஞ்சியதுடிகட்டுண்டடிபட்டிருப்பதுமே. (௨௨௨)

சத்துருமித்துருவித்துருமம்பொற்றாளமிட்டு
நத்துருநத்துருவத்துருவன்ரகுநாதன்வெற்பின்
மத்துருவைத்தரிசித்தோமுன்னூழிமதித்தவன்செய்
பத்துருவத்திலொன்றெப்போதுகாண்பதுபைந்தொடியே. (௨௨௩)

மன்னுமரக்கனைமுன்னாளைப்போரின்மகுடபங்கக்
தன்னாண்மையாற்செய்தமால்ரகுநாதன்சயிலமின்னே
கொன்னார்கலிங்கவங்கமலையாளக்குடகுதந்தாய்
பின்னாடணிமச்சதேசமுமீயிற்பெருமையுண்டே. (௨௨௪

கலமலிவேலையலையலைவீறுசங்கத்துறைசேர்
தலமிகுதேவைத்துறைரகுநாதனதன்வெற்பி
னலவனசத்திருவன்னீரும்மாலிங்குநாடொறுமுற்
பலமிலைமெத்தசலமுண்டிதென்னசம்பாவனையே. (௨௨௫)

நரியாடுமான்முசலான்போற்பகையஞ்சநாடுகுய
வரியாடவர்திலகன்ரகுநாதன்வரையணங்கே
யரியாடுகூத்துமுன்காட்டியநீயினியம்புலிச்சோ
தரியாடுகூத்தையுங்காட்டிலுண்டாம்வெகுநன்மைகளே. (௨௨௬)

ஓதண்டர்நாட்டிற்குடிவாங்கம்பந்தரொடுமணக்கான்
மீதண்டநாட்டப்புரிரகுநாதனல்வெற்பணங்கே
கோதண்டங்குந்தமுன்னீந்துபின்மாமகுடமுங்கட
வேதண்டமுந்தரினுனங்கதேசத்தைவெல்குவனே. (௨௨௭)

மாதண்டகாரண்ணியவாசிகண்முன்னிகல்வாய்க்கிலென்வில்
காதண்டுமென்றருள்செய்ரகுநாதன்கவின்வரைவாய்க்
கோதண்டக்குந்தகமின்மைமெய்யாகிற்குடமலைத
லேதண்டராகவமோதலங்காரவிளங்கொடியே. (௨௨௮)

புடவிகடந்தமிளவற்குமெய்த்தவம்பூண்டுமுன்னே
யடவிகடந்தபதரகுநாதனசலமின்னே
குடவிகடந்தரல்காட்டிக்கலையக்கைக்கொண்டொளித்த
கடவிகடந்தரலானையுஞ்சொல்வர்கண்ணனென்றே. (௨௨௯)

பூணனைதந்தைதனைநீங்கியானந்தம்பூணக்கஞ்ச
ஞணமுன்னாகவந்தரகுநாதன்மைநாகமின்னே
பாணனையோடியொளிக்கவென்றாங்கபந்தனையுங்
காணவென்றானையேதிருமாலென்பர்கண்டவரே. (௨௩௰)

சற்கோலவெம்பகுவாய்த்தாடகைபுத்திரகளிரா
ற்கோலுதவுதனுரகுநாதன்வரைமடவீர்
சாற்கோலிலம்பையங்கோட்டூர்தற்கோலந்தொழுதந்திரு
ற்கோலமுந்திருவேற்காடுமேற்றொ டுவேண்டியதே. (௨௩௧)

ருவார்த்தைமேற்கொண்டடர்பிசாசனர்கோளேவென்று
பருமகன்காத்ததுரைரகுநாதன்பிறந்தமின்னே
ருநீலகண்டரைவன்னத்துடன்முன்றிலையிற்கண்டோம்
ரதிருக்காளத்திவேடரைப்போரொடுங்காண்குதுமே. (௨௩௨)

டணு சொலிலங்கைச்சுவேலைக்கும்வேலைக்குமேன்
ரடணைசெய்யச்செயும்ரகுநாதன்வரைமடவீர்
டலிறைரத்தினம்பகர்ந்தாமகுடஞ்செய்வினை
ரடல்கண்டோம்வலைவீசாடலுங்கண்டறிதுவமே, (௨௩௩)

ருவானகந்தொடுசெம்பியிற்றேரைத்தலத்தளவா
ருவாகியமனுவாம்ரகுநாதன்வெற்பொண்டொடியீர்
ருவானைக்காவுஞ்சிரகிரியுங்கெரிசித்துவந்தோம்
நலூர்திரியம்பகம்விருப்பாட்சியுங்காண்குதுமே. (௨௩௪)

ரராநிதிதருசிந்தாமணிசுவர்க்கத்துடனிப்
ரராளுமிந்திரரகுநாதசேதுபதிவரைவாய்
ரரானையம்புலினுங்கஞ்சப்பாணிமணிவடமுந்
ராடல்காப்புறுவோஞ்சொற்செய்வினையெங்கேரிழையே. (௨௩௫)

ங்கையிலேவிடுமோடத்தலைவன்களித்துத்தொழ
ங்களுக்கோர்துணைநீயென்றருள்ரகுநாதன்வரை
ங்கைநல்லீர்தமைபன்றம்பியாமுறைமார்க்கப்படி
ங்குசம்போற்றரிசிக்கட்டுநாமவாயிலையே. (௨௩௬)

ரந்தரராசபுரந்தரனனதுரையுலகு
ரந்தவைபோகரகுநாதன்மால்வரைப்பொன்னனையீர்
ரந்தொழுவேங்கடங்காட்டியநீரினங்காட்டுமெணி
ரங்கனையாழிதரனைமுகுந்தனையப்பனையே, (௨௩௭)

னமானநீர்யௌவனமோகையீகைபொன்கல்விமெய்விற்
னமாண்மைமீறுரகுநாதசேதுபதிவரைவாய்த்
னரோகைகாட்டிமெய்லட்சணமுஞ்சொன்னசாத்திரமெய்
னமாநன்மச்சமுங்காட்டியுரைக்கிளிளங்கொடியே. (௨௩௮)

வெப்பளித்தாவமுறைபுக்கமெய்திகல்வேட்டிரத்தங்
கொப்பளித்தாகவஞ்செய்ரகுநாதகுபேரன்வரை
யொப்பளித்தாவதில்லாவஞ்சனமணியுண்மையிலாச்
செப்பளித்தாவதெனப்பிரயோசனந்தேமொழியே. (௨௩௯)

காலையிலாமலெக்காலையிலுஞ்செய்கடுங்கொலைவை
வேலையிலார்தருகோரகுநாதன்வியன்சிலம்பி
னாலையிலாமற்செயுமிடையீர்முன்புநூதனமாஞ்
சேலையிலாமற்றருவதுண்டோவெறுஞ்சிதனமே. (௨௪௰)

நாலாப்பனுவனவரசச்சொற்றமிழ்நாவலர்க்கு
மேலாம்பரிசருண்மால்ரகுநாதவிதுறன்வெற்பிற்
பாலாஞ்சுயோதனமாருதிச்சண்டைமுன்பார்க்கநடு
நீலாம்பரனில்லையேயுரைப்பாரெவர்நேரிழையே. (௨௪௧)

சேலனமேதிசொரிசுதையுண்பணைச்செம்பியன்செங்
கோலனபாயன்ரகுநாதன்மால்வரைகொண்டவரைப்
பாலனமென்மொழியீர்முன்குசலைப்பணிந்ததுபோ
னீலனையுந்தொழுதாலெய்தலாஞ்செல்வநேத்தியதே. (௨௪௨)

தம்பதமாதியிடக்கம்பாததரியலர்க
ணம்பதசேடதிராகச்செய்ரகுநாதன்வெற்பிற்
கம்பதனமிடம்நீர்முனமாலெனக்காட்டியிகற்
கும்பதனங்கண்டொளிப்பதென்னாந்தகங்கோவலனே. (௨௪௩)

வந்தனமாகத்தொழுவார்க்குமந்திரம்வாய்த்ததிக்கு
பந்தனமாகும்ரகுநாதசேதுபதிவரைவா
யிந்தனவத்திரத்தீர்கலியாணமிசையிலிகு
சந்தனமுன்கொடுத்தீர்கொடுப்பீரட்சதையினியே. (௨௪௪)

துருப்பதனைக்கொணர்ந்தன்றெதிர்விட்டுத்துரோணனொனுங்
குருப்பதமேத்துமனுரகுநாதகுமுணன்வெற்பிற்
கருப்பதனல்லுருவீர்முதனுமல்லிகார்ச்சுனமாம்
பருப்பதமேத்தினமாடுதுமேற்றுங்கபத்திரியே (௨௪௫)

மித்திர்புத்திரனீகைக்குவாகைக்குமேவுபவ
பத்திரனன்னரகுநாதசேதுபதிவரைவாய்ச்
சித்திரமென்மொழியீர்காமக்கோடைதெறுவெயிற்குச்
சத்திரமுன்கொடும்பின்கொடுநீர்க்குடந்தாகத்திற்கே. (௨௪௬)

டமீ[illegible]ந்தென்னவனைக் குழ்கெல்[illegible]த்தனிலெல்லண்டி ரு
டமி[illegible]ம்தன்னமுறா சொலிசெய்[illegible]நாதன் வெற்பிற்
டமிருந்தென்னவனாயிர் மருந்[illegible]ம்பண்டிகவா
ட[illegible]ருந்தென்னமுன்சத்தி[illegible]காண் குவமே. (௨௪௭)

யகங்களித்தவிருகிணை[illegible]கழியா மயிர்க்கென்.
னங்களித்தா ரகுநாதசேதுப[illegible]வாய்க்
னங்கணேர்ந்தனமென்[illegible]தன்னகாட்டியென்ன
னங்க[illegible]க்களித்தார்[illegible]செய்குவகன் றுந்தலே. (௨௪௮)

டலையுடலையுளம[illegible]
[illegible]லைவிலாம[illegible]
[illegible]லைவசியா[illegible]வாரிவ
டலைவிடலையிலா[illegible]சிட்பட்டதே. (௨௪௯)

த்திணையாவலாரிமுன் போ[illegible]செறுநர் வெலும்
த்திணையன்ன ரகுநாதசேதுபதி வணவா
த்திணையன்னமடவீர் பணைபணையுடையர் னெலச்ச
த்திணையில்லை[illegible]லாந்தனத்துக்கு மோசங்களே. (௨௫௰)

டலையுடைபகிட்டிங்கையர்கோனையடித்தசீர்
டலையெனுமெய்ரகுநாதன் மால்வரைமெல்லியலா
டலைவிடுமணிக்குந்தனமேனெளியேங்களுக்கும்
டலையவனுடனிந்நாலும் போம்பசலைகைகண்டதே. (௨௫௧)

ருணையுந்துமணியெயிற்றேறைவக்கரசன்கொடைத்
ருணையாதருண்மால்ரகுநாதன் சயிலமன்னீர்
ருணைமுன்புகடிந்திரணிபணிவார் மொய்க்கும்ப
ருணையுந்தெறினீர் பிசங்கோதண்டங்கைக்கொண்டதே (௨௫௨)

ல்லைபசுங்கலின்பின்னார்கள் வண்டினமொய்க்கவாச்
சல்லுமிவளித்துறை ரகுநாதன் சிலம்பனையீர்
[illegible]ல்லமுன்னைசக்குபவரிவந்தாகுதிக்கக்கண்டும்
ல்லைபமெக்கொளித்திருக்கள் சேலகம்[illegible]ழ்க்கதுவே. (௨௫௩)

ற்கடங்காக்கொடியாலவட்டப்படை சேரலர்கோ
ற்கடங்காணத்தெறு ரகுநாதனல்வெற்பனையிற்
சாற்கடங்காதபுகழ்முகராமனிற்றேன்றியநீர்
ற்கடங்காண்பித்துத்தாவாமுன்வேலைமறைத்ததென்னே (௨௫௪)

னம்படைத்திடுமொனவந்தசேரலர் தொடைப்போல்
னம்படைத்தோடவிடு ரகுநாதன் வனமடவீர்

தனம்படைத்திரிரண்டோர்படைத்திறொன்னதாட்சியுண்ண
வனம்படைத்திரில்லைசத்திரமேதுக்கடைத்ததுவே. (௨௫௫)

கொள்ளமறையவர்க்கெண்ணிருதானங்கொடுத்தமைச்சர்
விள்ளமறைகொளுளரகுநாதன்வியன்சிலம்பிற்
புள்ளமறையிதெனுங்குழலீர்முன்புகல்கணக்கு
வெள்ளமறையவுடனேபதும்வெளிப்பட்டதே. (௨௫௬)

குத்திபல்லாரிபுனுடில்லியுச்சினிசோலகொண்ட
சித்திரக்கன்முதல்வெல்ரகுநாதன்சிலோச்சயவா
யத்திரியைத்தரிசித்தோஞ்சரபங்கனாச்சிரமச்
சித்திபெற்றுலினிநாமேயிராமனுஞ்சிதையுமே. (௨௫௭)

கதக்குஞ்சரக்கரினத்தைச்சினத்துக்கடித்துணவாய்
குதக்குஞ்சரக்குமுனைரகுநாதன்குலவரைவாய்
மதக்குஞ்சரக்குழலீர்தனபாரமதிப்பறிந்தோ
மிதக்குஞ்சரக்குப்பைகாட்டிமுன்கொண்டவிலைசொல்லுமே. (௨௫௮)

இடக்குமுறைசெய்கொடுங்கோலரசரினத்தைவெட்டி
வடக்குமுனைவடிவாள்ரகுநாதனணிவரைவாய்க்
குடக்குவடக்கறிந்தோமதன்விற்குணக்குத்தக்கண
நடக்குமிடமினியாமறியோமிங்கனன்னுதலே. (௨௫௯)

திசையம்படிக்கவளர்செம்பிநாடன்மெய்த்தேவையர்கோ
னசையம்படிக்கவரும்ரகுநாதனன்னாட்டினுயர்ந்
தசையம்படிக்கவுங்காவேரிகாணவுந்தந்தவுங்கள்
விசையம்படிக்கவிடுங்கல்வினென்கொள்ளமெல்லியரே. (௨௬௦)

போரணவாசிநடத்தியமாத்திரைபுத்திரன்மெய்
யோரணவாசிமுனைரகுநாதன்வெற்பொண்டொடியீர்
வாரணவாசமுன்கண்டுவந்தோநல்லவாரிதிசேர்
காரணவாசிமணிகோகனமென்றுகாண்பதுவே. (௨௬௧)

படியிட்டமாகப்புரந்தடங்காதபகையைவென்ற
வடியிட்டவேற்கைரகுநாதரின்மணிவரைவாய்த்
தொடியிட்டசெங்கையிளம்பிடிநீயங்தோன்றவுடம்
பிடியிட்டபோதல்லவோநிசமாமுன்பிடியிட்டதே. (௨௬௨)

குனிக்குமுன்னேசிலையொன்னலர்வாய்ச்சொல்குளறவுமெய்
பனிக்கும்வென்கண்டரகுநாதசேதுபதிவரைவாய்ச்
சனிக்குமுன்னேதிருவாரூர்க்கமலத்தடத்தைக்கண்டோ
மிணிக்கண்டுபோற்றுதுமம்பலவாணன்மன்றேந்திழையே. (௨௬௩)

துணிவார்க்குமாபலிபாற்றுனமேற்றிடத்தோயத்தைமுன்
னணிவாக்குமாபுரிதேவைத்துறைரகுநாதன்வெற்பிற்
புணிவார்க்குச்சொர்க்கமளித்தாயினியப்பரமபதந்
தணிவார்க்குநீதரிலுண்டாமகிமைதளிரியலே. (உசுச)

சுகராலயத்தையற்றோர்பணிதேவைதொழுமன்னர்சூழ்
நகராலயத்தைரகுநாதனுகமுன்னாட்டந்தந்தே
சிகராலயத்தைமுன்காணப்பெற்றோம்வசுதேவர்தந்த
மகராலயத்தையுங்காணிலுண்டாங்கதிவாணுதலே. (உசுரு)

ஓகையையூகையுடனேகொண்டாதுலர்க்கோய்வதின்றி
பீகையையீகைபுரிரகுநாதன்வெற்பேந்திழையீர்
வாகையைக்காட்டியதுபோலிப்போதுங்கண்மன்னவன்ப
தாகையைக்காண்பிக்கினீரோயவற்குத்தளகர்த்தரோ, (உசுசு)

நூதனமாகத்தருவிற்கனகன்னூற்கவிக்குச்
சீதனமாகத்தருரகுநாதனற்றேவையன்னீர்
மாதனநாகமுன்காணவென்றுக்கிரவழுதியைப்போற்
கேதனங்காட்டப்பயந்தாலுமக்கபகீர்த்திகளே. (உசுஎ)

நெருப்புஞ்சதாகதியுங்கலந்தாலெனநேரலர்மேற்
றிருப்புஞ்சமர்வடிவேல்ரகுநாதனற்றேவையன்னீர்
கருப்புங்கலகமுமையம்புகலுநல்காதுநற்பால்
மருப்புந்தனம்பணியாரமளித்ததென்பாக்கியமே. (உசுஅ)

காலத்தந்தத்தியையாறிடுமாப்படைக்காவலன்செங்
கோலத்தந்தத்தியைச்செய்ரகுநாதகுழுணன்வரைப்
பாலத்தந்தத்தியைவாய்மடவீர்முன்பரமனைப்போற்
சேலத்தந்தத்தியையெங்கொளித்தீர்தரிற்றோற்றுவனே. (உசுகூ)

மாட்டாங்குளப்படிபோலொன்னலர்படைவாரிகடந்
தேட்டாங்குளத்தினிதிரகுநாதன்வெற்பேந்திழையீர்
காட்டாங்குளமலையாங்குளங்கண்டனனாயினிமேற்
காட்டாங்குளத்தையுங்காண்பதெப்போதுகழறுகவே. (உஎ௰)

குடம்பிடிக்கைதவளர்செம்பிகாட்டிலரகுநன்மை
யிடம்பிடிக்கைதரச்செய்ரகுநாதன்வெற்பேந்திழையீர்
நடம்பிடிக்கைதவருமுன்களூர்ப்பயிர்காணக்குடி
புடம்பிடிக்கைதருமுன்வாரகந்தந்துத்தமமே. (உஎக)

கடம்பணிலஞ்செறியுஞ்செம்பிநாட்டிற்றரியலரும்
படம்பணிகேட்டுத்தொழுரகுநாதன்மெய்யேமவெற்பிற்

கடப்பணியாக்குகுடமுன்கண்டோமயில்காணிலன்றே
இடம்பணிவோமயில்வாகனனென்றவினைத்தேமொழியே. (௨௭௰

ஊனேமுன்காட்டும்புறவினுக்காகவுதவுமனுக்
கோனேமுன்காட்டத்தகுரகுநாதகுபேரன்வரை
யானையின்மேல்வைத்துக்கோலமுனைகாட்டியருளிவட
மீனையுங்காட்டலன்றேசுகமியானைமெய்மெல்லியலே, (௨௭௧

நாலாற்கலிபடையேயாருயிர்கொண்ணமனனவே
வேலார்கரதலமால்ரகுநாதன்விலங்கன்மின்னே
மாலார்திருக்கச்சியத்தகிரிகண்டுவாழ்ச்சுவணம்
பாலாறுசேர்திருப்பார்கடல்கண்டிடணிதுவன்றே, (௨௭௨

வெருவிடர்வைக்கோலவட்டியமாகக்கைவேல்கொண்டிக
லுருவிடங்கைத்தப்பொருராகுநாதன்வெற்பொண்டொடியீர்
மருவிடங்கைதப்பணியிற்றிருந்தமலைமாலைக்கண்டோர்
திருவிடங்கைதக்குயிலைக்குமபோவர்தெரிசிக்கவே. (௨௭௩

தனக்குத்தனாவெனவாழ்செம்பிகேதனைத்தலத்தார்மகிழ்
தனைக்குத்துணைரகுநாதன்சிலோச்சயத்தோகையன்னீர்
வனைக்குவனயுளதென்றுமுன்காட்டவரினுமனைவ
இனைக்குத்தினையிவரோவுலகிதமெரிந்தவரே. (௨௭௪

மஞ்சனையிற்சிதளிவளர்செய்பெருஞ்சளிஞ்சி
விருகமெய்த்தேனைவைத்துரகுநாதன்விலங்கன்மின்னே
ஆஞ்சமுனேமுதகுந்தலிலாமற்றாத்தியநீ
கஞ்சனைபுந்தொலைத்தாற்றெருமுவாருனைக்கண்ணனன்றே. (௨௭௫

கேட்டந்தமன்னரிசைவீரமாண்மைகிளப்பக்கூண்
ணுட்டந்தமெய்ரகுநாதன்றேனைச்சட்டக்கிரியாய்க்
காட்டந்தமாஞ்சொற்கடைமருந்திற்பெருங்காயமென்று
கோட்டந்தந்தீர்கடுக்காய்ப்பூவுநீர்தரக்கோருவனே, (௨௭௬

குச்சிலைபெய்தப்பெறுதலரோனுந்தற்சோரிவங்கான்
மச்சிலைபெய்தச்செயும்ரகுநாதன்வரைமடவீர்
நச்சிலையென்பதறிந்தோதரும்பாலினிநாங்களுய்யக்
கச்சிலையென்பதுஞ்செய்தால்வெகுநன்மைகாணுமக்கே. (௨௭௭

அஞ்சையிலே ருவேலெ ரெளிபனையாதரிக்கு
மஞ்சையிலே சனச்செயரகுநாதமகிபன்வரைப்
புஞ்சையிலேதுவரையென்றுகாட்டியப்போதஞ்சா
நஞ்சையிலேயெனமோர்பெண்ணேபொன்னிநாட்டினிலே. (௨௭௮

சந்தனுபோசனனான்மாதவனிச் சந்திரன்போல்
சந்தனுமானமதுராசுநாதன்வரையடவீ
செந்தனுவெய்தமரிமாவிரண்டடிலக்குத்தப்பி
வந்ததிலொன்றைமறைத்தொன்றைக்காட்டனன்மார்க்கமதே. (உஅக)

நாகமிருந்கவழியோர்க்கமுகங்கருகவிற்றி
யாகமிருந்தசுராதநாதனணிவரைவாய்
மாகமிருந்கருவிர் துரோணவருபதும
யூகமிருந்துஞ்சயமிளிபமோடியொளித்ததென்னே. (உஅஉ)

வீரன்போர்க்குவெருவிமுன்சந்திவிடினுமொப்பாத்
தீரனமதமாரகுநாதன்சிலம்பனையீர்
நீரன்னைக்கொண்டுவெற்பரனைத்தள்ளனீதியன்று
பாரரணம்பியுங்களாமனைப்பாழென்பரே. (உஅங)

வாட்டானைகொண்ட கடற்றானமண்டவருமகத
நாட்டானைவென்றமெயாரகுநாதமகேந்திரன்வரைக்
காட்டானையென்றகட்மர்கிள்ளையேந்திமுன்காணுமயிற்
கொட்டானைவென்முகருப்பிளையாதுரங்கோகிலமே, (உஅச)

கூட்டிடநட்பைப்பிரிக்கப்பிரித்ததைக்கூட்டிப்பின்னு
கூட்டிடச்செய்தந்திரரகுநாதன்விலங்கலன்னீர்
பட்டிடைச்செட்டியுரத்தைகமுன்காண்பித்துநஞ்சத்தைப்பின்
காட்டிடவோமறைத்திருங்கள்வாணிபங்கைகண்டதே (உஅரு)

கிள்ளைமறைசொலக்கோகிலங்கேட்டுக்கிளர்பொழில்சூழ்
வள்ளையஞ்செம்பியாள்ரகுநாதன்வரைமடவீர்
பிள்ளைமுன்பெண்டந்தகானக்கண்டோமந்தப்பிள்ளைசைவங்
கொள்ளையிடச்சமணேடிட்டதுங்கண்டுகொள்வதென்றே. (உஅசு)

கலையிருந்தாலுமுளத்திற்றருமங்கமுறுமனு
நிலையிருந்தாலமகிழ்ரகுநாதமிருபன்வெற்பிற்
சிலையிருந்தாவதென்னேகட்டியப்பரைச்சேர்க்கமுன்னே
யலையிருந்தாலல்லவோசொல்லுவாயினியங்கனையே, (உஅஎ)

நாதகமம்புகரைபிட்டிமாரதநாகமன்செய்
சாதகமன்னுமாரகுநாததயாளன்வெற்பிற்
பேதகமின்னப்பெருந்துறைகாட்டியபின்னலவோ
போதகங்காட்டத்தகுமடியார்கட்குப்பூங்கொடியே (உஅஅ)

வான்சிந்திப்பூநிகரிக்கத்தைம்மாறுமைவள்ளல்செம்பிக்
கோன்சிந்திப்பாவலர்சொல்ரகுநாதன்குலவரையீர்

தேன்சிந்திப்போமென்றனித்தீர்முன்பானையத்தேனைத்தந்தா
னுன்சிந்திப்போனென்றுந்திந்திக்கக்கொணடேஞ்சனுமைத்தையே (௨௮௯)

கட்டணக்கோட்டைநிதியொடுமென்னர் தங்கைகுவித்துக்
கொட்டணக்கோட்டைவிடுரகுநாதகுபேரன்வரை
யுட்டணக்கோட்டைநிகர்களத்தீர்தருமுங்கள்பெரும்
பட்டணக்கோட்டையைப்போற்சந்தைப்பேட்டையைப்பார்க்கட்டுமே.

குஞ்சத்தைவெள்ளைக்குடையைத்தமிழ்க்குக்குலவுசப்பிர
மஞ்சத்தையீயுங்கொடைரகுநாதமகிபனல
வஞ்சத்தைவென்னடைமானேமுன்பந்தனையாதரித்த
கஞ்சத்தைச்சேர்ந்தனன்சேர்வதெப்போதுவங்காளத்தையே. (௨௯௧)

விண்புவிபூடணமாடைபொன்னுடைவிபவமென்று
நண்புவிபீடணர்செய்ரகுநாதநரேந்திரன்வெற்பிற்
பண்புவிபூதியனையீரிருகொங்கைபாலித்தநீ
ருண்புவிபூசனையாற்கொள்ளுவாரையுதவலையே. (௨௯௨)

பம்புவிபாகரணங்கலைஞானங்கொள்பண்டிதரா
னம்புவியாழமெனும்ரகுநாதன்மைந்நாகமின்னே
கொம்புவியாசர்கதையெழுதேடுகொடுத்ததுமெய்
யம்புவியாளவரமுந்தந்தாற்கவியாணமெய்யே, (௨௯௩)

உருமானையிட்டிகவேதாவிபவத்துருப்பசிக்கோ
தருமானையிட்டவிரல்ரகுநாதன்மடவரைவாய்
வருமானைமென்குழலீர்செய்குவார்கைவரினுமெய்யாக்
கருமானையின்றிபமையாதுகாண்கும்பகாரனுக்கே (௨௯௪)

கங்கையைக்கண்டவர்கங்கையைக்கணடுகருதுமவர்
சங்கையைக்கண்டனைசெய்ரகுநாதன்சயிலவரை
யிங்கையைக்கண்டசொற்றேன்வஞ்சிகூடலிறைசொல்வஞ்சி
கொங்கையைக்கண்டனன்பாணரையுங்கண்டுகொள்ளுவனே (௨௯௫)

வானங்குலவரையெங்குந்தன்சீர்த்திவளரவுமை
கோனங்குலப்பணிசெய்ரகுநாதகுமுணன்வரைத்
தானங்குலவுமின்னனீர்முன்பேற்றவர்தங்களுக்கு
மானங்குலமெய்தப்பண்ணுமுன்னேவந்தமாதங்கமே. (௨௯௬)

தென்னவரைவில்லவரைமனுவிற்றிருத்தியிசை
மின்னவரைசுபுரிரகுநாதன்விலங்கலன்னீர்
சொன்னவரையறிந்தோமுங்கள்காவியஞ்சூத்திரமா
மென்னவரையமறையாமலீந்திடுமெங்களுக்கே. (௨௯௭)

திறையடிக்கும்பலதீவுங்கலிப்பகைதீரவென்று
பறையடிக்கும்பொன்ரகுநாதசேதுபதிவரைவாய்க்
கறையடிகும்பமுனிகாட்டக்காணுந்தொல்காப்பியத்தின்
மறையடிக்கும்பன்முடிக்குமுனையொன்றுவாணுதலே. (௨௯௮)

சிந்துரத்தந்தளமேற்கொண்டிடப்பரசேனையைமொய்
சிந்துரத்தந்தளவேல்ரகுநாதன்சிலம்பிம்பொன்னே
சிந்துரத்தந்தச்சந்தங்கண்டனமொன்றுசேரயடிச்
சிந்துரத்தந்தமிகுகிதழுங்கண்டுதேர்வதென்றே. (௨௯௯)

நிசிசரனன்றுமெய்யென்னும்வெங்கூற்றைநிமிடத்திற்கொல்
விசிகரமன்றெறிடுவேல்ரகுநாதன்வியன்சிலம்பில்
ருசிகரமென்றயின்மோகனதம்பனருபமின்னே
வசிகரமென்றறிவிப்பாய்முன்பேதனம்வாய்த்தவர்க்கே. (௩௱)

மச்சுப்பெய்விடுநிதியாமறையவர்வாழ்த்தவொரு
மிச்சுப்பெய்தானரகுநாதன்மால்வரைமின்னனையீர்
கச்சுப்பயோதரவண்ணப்பொன்மாலைமுன்காட்டியநீர்
நச்சுப்பொய்கைத்தலத்தைவரைமீட்டிடினன்மையுண்டே. (௩௱௧)

தனதடம்பத்திசெலுத்தலரற்கெனுந்தர்மவுள்ளத்
தனதடம்பத்திகருரகுநாதன்சயிலமன்னீர்
தனதடம்பத்திபந்திரிணியஞ்சனைவவச்சு
பனதடம்பத்தியதிகாரமுந்தரத்தக்கவரோ. (௩௱௨)

வைப்போதகத்தைமராமாநிதிமணிமானுமெய்யி
சைப்போதகத்தைவரரகுநாதன்சயிலமன்னீர்
நைப்போதகத்தைநுசுப்பிரினிதுடனுனுங்கள்பொய்
கைப்போதகத்தையுங்கைப்போதகமெனக்காணட்டுமே. (௩௱௩)

பண்டுதந்தீர்வையில்லாமற்குடிகட்குப்பற்றலர்மெய்
விண்டுதந்தீர்படச்செய்ரகுநாதவிசயன்வெற்பில்
வண்டுதந்தீர்வைகியகுழலீர்கொண்டைமாலைமணச்
செண்டுதந்தீர்சரமுந்தரக்கோருமென்சிந்தனையே. (௩௱௪)

வருமலைவென்றரவிபோற்பகையைமடித்துக்கொடைத்
தருமலைவெய்தத்தருரகுநாதன்சயிலமன்னீர்
பொருமலையீசத்தியையொழித்திருப்புரிவலியை
யிருமலையுந்தவிர்த்தானீர்மருத்துவரெங்களுக்கே, (௩௱௫)

அல்லாரக்குண்டாலில்லாமைமந்திரத்காற்செம்பிநா
டெல்லாமையுங்கொடுவாழுரகுநாதன்வெற்பேந்திழையீர்
நல்லாலாப்போல்வருங்கல்லாமைவிட்டெங்கஞாயஞ்சொல்லு
மில்லாமைக்காய்கின்றவல்லாமைக்காட்டுதலெங்களுக்கே. (௩௱௬)

உடலையிருகலையுற்றேன்பழிதொடர்ந்தோடிவர
வடலைடயவென்றரகுநாதனறேவைமணிவரைவாய்
மடலைகிசர்த்தகுழலீர்நற்சாககலாவட்டித்தந்தீர
கடலையும்விட்டுக்கலந்தாலல்லோருகொண்பதுவே. (௩௱௭)

வளமேவுதேவைரகுநாதபூபன்வரையிடத்தே
குலமேவுசெஞ்சொற்குயிலனையீர்நின்கொடுவிரக
புளமேவுகாமசரசாசந்தீர்த்திடவுன்னிடத்தா
மிளநீரைத்தந்தினிக்கண்டிரவாவிடிலென்பலனே. (௩௱௮)

நித்தஞ்சும்பிட்டுப்பரராசர்பற்கெஞ்சிநிற்பப்பொன்னை
வைத்தங்கிருக்குரகுநாதன்தேவைமணிவரைவாய்
நத்தக்கும்பிட்டகுழலீரதிசயநன்றுநன்றிங்
கத்தங்கும்பத்தைவிட்டப்பாலிராசிநட்பானதுவே. (௩௱௯)

பையாடரவம்புனைராமலிங்காபதம்பணியு
மையாவெனுஞ்சொற்றுசரகுநாதன்மைந்நாகடர்னீர்
செய்யாததிசயஞ்செய்தீர்தனதனைத்திறந்தளித்துக்
கையாற்கடலடைத்தீர்திருமாறிறங்காட்டியதே. (௩௱௰)

கோவைத்துறையொன்றினூறுசொண்டமைக்கொண்டலெங்க
டேவைத்துரைதளவாய்ரகுநாதன்சிலம்பின்மத
னேவைக்கொடியையுராசைவின்ஞலோயெழில்வனசப்
பாவைச்சமுதனையீர்மறைத்திரென்பவைமென்னவே. (௩௱௧௧)

இரகுநாதசேதுபதி ஒருதுறைக்கோவை

முற்றிற்று.

☞ இன்னுங்குறைவுபட்ட செய்யுட்களிப்பொழுது கிடைத்தற்கரிதாயிருத்தலின் சேகரித்துவைத்திருக்கிற புண்ணியவான்கள் இதை அச்சிட்டவருக்கு அனுப்பினல்பின்னரவற்றையிரண்டாமுறையச்சிப்பதிப்பித்து உதவிசெய்தவர்கள் பெயரையும் வெளிப்படுத்தி வந்தனத்துடன்சிலபிரதிகளையும் அனுப்பப்படும்.